Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم    نحمده ونصلي على رسوله الكريم    وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி
2
வருடாந்திர
சந்தா
ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly
**BADAR** Qadian
TAMIL

இதழ்
19
ஆசிரியர்
முஸ்ஸம்மில்
அஹ்மது
துணை
ஆசிரியர்
ரஃபீக்
அஹ்மது

14 ஷஃபான் 1438 ஹிஜ்ரி கமரி    11 ஹிஜ்ரத் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி
11 மே 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நான் மர்யத்தின் மகன் ஈஸா அவர்களுக்கு மிகவும் கண்ணியமளிக்கின்றேன். ஏனெனில் மஸீஹ் இப்னு மர்யம் இஸ்ரவேலரின் சமுதாயத்திற்கு 'காத்தமுல் குலஃபா' வாக இருந்ததுபோல் நான் ஆன்மீகமான முறையில் இஸ்லாத்தில் காத்தமுல் குலஃபாவாக இருக்கிறேன். மேலும் மூஸா உடைய சமுதாயத்தில் இப்னு மர்யம் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருந்ததைப்போல் நான் முஹம்மதிய்ய சமுதாயத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கிறேன். அவருடைய பெயரைக் கொண்டிருக்கும் நான் அவரை பெரிதும் கண்ணியப்படுத்துகிறேன். நான் மஸீஹ் இப்னு மர்யமுக்கு மதிப்பு அளிப்பதில்லை என்று என்னை குறை கூறுகிறவர் குழப்பத்தை உருவாக்கக் கூடியவரும் இட்டுக்கட்டி பேசக் கூடியவருமாவார்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

ஈசப்னு மர்யம் (மர்யமின் மகனாகிய ஈசா) மரணமடைந்து விட்டார் என்பதையும் அவரது மண்ணறை காஷ்மீர் ஸ்ரீநகர் கான்யார் வீதியில் இருப்பதையும் உறுதியுடன் அறிந்து கொள்ளுங்கள்[1]. இறைவன் தனது புனித வேதத்தில் அவர் மரணித்துப் போனதாக அறிவித்துள்ளான். இந்த வசனத்திற்கு வேறு பொருள் இருக்குமானால் ஈசப்னு மர்யமின் மரணத்தைப் பற்றிய செய்தி திருக்குர்ஆனில் வேறு எங்குள்ளது? நமது எதிரிகள் கருதுவதைப்போல மரணத்தைப் பற்றி வந்துள்ள வசனங்களுக்கு வேறு பொருள் இருக்குமானால் அவர் ஏதாவது ஒரு நேரத்தில் மரணமடைவார் என்றும் கூட குர்ஆன் அவரது மரணத்தைப் பற்றி எங்கும் கூறவில்லை என்றாகிவிடும். நமது நபி (ஸல்) அவர்களுடைய மரணத்தைப் பற்றித் தெரிவித்த இறைவன் ஈசாவின் மரணத்தைப் பற்றி முழுக் குர்ஆனிலும் கூறாததன் இரகசியமென்ன?

فَلَمَّا تَوَفَّيْتَنِي كُنْتَ اَنْتَ الرَّقِيْبَ عَلَيْهِمْ [2] *(5:118)* என்னும் வசனத்தில் ஈசாவின் மரணத்தைப் பற்றி செய்தி காணப்படுகிறது என்று நீங்கள் கூறுவீர்கள் என்றால், கிறித்தவர்கள் வழி கெட்டுப் போகும் முன்பே அவர் இறந்து போனார் என்பதை இந்த வசனம் தெளிவாக நிரூபிக்கிறது.

فَلَمَّا تَوَفَّيْتَنِي என்ற இந்த வசனத்திற்கு ஈசா (அலை) பூத உடலுடன் வானத்திற்கு உயர்த்தப்பட்டார் என்ற பொருள் இருக்குமானால் இவர் உயிருடன் இருக்கிறார் என்ற எண்ணம் இலட்சக்கணக்கானவர்களை நாசமாக்கி இருக்கையில் இறைவன் அப்படிப்பட்டவரின் மரணத்தைப் பற்றி முழுக் குர்ஆனிலும் ஏன் எங்குமே குறிப்பிடவில்லை? இது எவ்வாறென்றால் மக்கள் இணைவைப்பவர்களாகவும் மார்க்கப்பற்று அற்றவர்களாகவும் ஆகுவதற்காகவே அவரை இறைவன் என்றென்றும் உயிருடன் இருக்க அனுமதித்திருக்கிறான் என்றும், இது மக்களது தவறு இல்லை; மாறாக, மக்களை வழி கெடுக்கும் பொருட்டு இவற்றையெல்லாம் இறைவனே செய்திருக்கிறான் என்றும் ஆகிவிடும். மஸீஹின் மரணம் இன்றி சிலுவைக் கொள்கைக்கு மரணம் வரமுடியாது என்பதனை நீங்கள் நன்றாக நினைவில் வையுங்கள். திருக்குர்ஆனின் போதனைக்கு மாறாக அவரை உயிருள்ளவராக நம்புவதால் என்ன பயன்? ஆகவே இந்த மார்க்கம் உயிர் பெரும் பொருட்டு அவரை மரணிக்கச் செய்யுங்கள். இறைவன் தனது திருவசனங்களால் மஸீஹ் உடைய மரணத்தைப் பற்றி வெளிப்படுத்தியுள்ளான். மேலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிஃராஜ் இரவில் அவரை மரணித்தவர்களுடன் பார்த்திருக்கிறார்கள். நீங்கள் இப்போதும் ஒப்புக் கொள்ளவில்லையென்றால் இது எப்படிப்பட்ட ஈமான் (நம்பிக்கை) ஆக இருக்கிறது? இறைவனின் சொல்லை விட மனிதர்களின் அறிவிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றீர்களா? இது என்ன மார்க்கம்?[3]

நமது ரஸூல் (ஸல்) அவர்கள் மரணித்த ஆன்மாக்களில் ஈசாவையும் நான் பார்த்திருக்கிறேன் என்று சாட்சியம் கூறியது மட்டுமல்லாது இதற்கு முன் எவரும் உயிருடன் இருந்ததில்லை என்பதையும் தம்முடைய மரணத்தைக் கொண்டு வெளிப்படுத்தி விட்டார்கள். எனவே, நமது எதிரிகள் திருக்குர்ஆனை கைவிடுவதைப்போன்று சுன்னத்தையும் விட்டு விடுகிறார்கள். ஏனெனில் மரணம் அடைவது நமது திரு நபியின் சுன்னத் ஆகும். ஆனால் ஈசா (அலை) உயிருடன் இருக்கையில் நமது நபி (ஸல்) மரணம் அடைவது அவர்களுக்கு இழுக்காகும். ஆகவே நீங்கள் ஈசாவின் மரணத்தை ஒப்புக் கொள்ளாதவரை நீங்கள் சுன்னத்தை கடைபிடிப்பவர்களும் அல்லர். குர்ஆனை கடைபிடிப்பவர்களும் அல்லர். மேலும் நான் ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களது மகத்துவத்தை நிராகரிப்பவன் அல்லன். முஹம்மதின் சமுதாயத்தில் தோன்றிய மஸீஹ் மூஸாவின் சமுதாயத்தில் தோன்றிய மஸீஹை விட மேன்மையானவர் என்று இறைவன் எனக்கு கூறியபோதிலும் நான் மர்யத்தின் மகன் ஈஸா அவர்களுக்கு மிகவும் கண்ணியமளிக்கின்றேன். ஏனெனில் மஸீஹ் இப்னு மர்யம் இஸ்ரவேலரின் சமுதாயத்திற்கு 'காத்தமுல்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

1. கிறி.்.தவ ஆராய்ச்சியாளர்கள் இதே கருத்தையே வெளிப்படுத்தியுள்ளார்கள். சூப்பர் நேச்சரல் ரெலிஜன் பக்கம் 522 விளக்கத்திற்கு நமது நூலான துஹ்பா கோல்டவிய்யா பக்கம் 139 பார்க்கவும்.

2. ஹஸ்ரத் ஈசா (அலை) மீண்டும் உலகிற்கு வரமாட்டார் என்று இந்த வசனத்திலிருந்து தெரிய வருகிறது. ஏனெனில் அவர் மீண்டும் உலகிற்கு வருபவராக இருந்தால் கிறித்தவர்கள் வழிகெட்டுப் போன விஷயத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்ற ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களின் பதில் பொய்யாகி விடுகிறது. மீண்டும் இந்த உலகிற்கு வந்து நாற்பது ஆண்டுகள் இருந்த ஒருவர் தன்னை தெய்வமாக நம்பி வந்த கோடிக்கணக்கான கிறிஸ்தவர்களை பார்த்தவர் சிலுவையை உடைத்து அனைத்து கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களாக மாற்றியவர் கிறிஸ்தவர்கள் வழிகெட்டுப்போன விஷயத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று இறுதி நாளில் இறைவன் முன்னிலையில் எவ்வாறு சாக்குக் கூற முடியும்?

3. சிலுவை சம்பவத்திற்குப் பின்னர் மஸீஹும் அவரது தாயாரும் காஷ்மீர் பக்கம் சென்று விட்டதாக திருக்குர்ஆனின் ஒரு வசனத்தில் வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது وَّاٰوَيْنٰهُمَآ اِلٰى رَبْوَةٍ ذَاتِ قَرَارٍ وَّمَعِيْنٍ அதாவது நாம் ஈசாவுக்கும் அவரது தாயாருக்கும் நீரூற்றுகள் நிரம்பிய ஒரு குன்றின் மீது தங்குவதற்கு ஓர் இடத்தை அளித்துள்ளோம். அது தங்குவதற்கேற்ற வசதியான ஓர் இடமாகும். (23:51) இதில் இறைவன் காஷ்மீரின் சித்திரத்தை வரைந்துள்ளான். மேலும் 'ஆவா' என்னும் சொல் அரபு அகராதியில் ஏதாவது ஆபத்து துன்பத்திலிருந்து அடைக்கலம் கொடுத்தல் என்பதற்காக வருகிறது. சிலுவை சம்பவத்திற்கு முன் அடைக்கலம் கொடுக்க வேண்டிய காலகட்டம் எதுவும் ஈசாவுக்கும் அவரது தாயாருக்கும் வரவில்லை. ஆகவே இறைவன் ஈசாவையும் அவரது தாயாரையும் சிலுவை சம்பவத்திற்குப் பின்னர் இந்தக் குன்றின் மீது அனுப்பி வைத்தான் என்பது தெளிவாகிறது.

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

முறையாக ஜமாஅத் நிறுவப்படாத அந்தக் காலத்திலிருந்தே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிர்ப்பு இருந்து வருகின்றது. அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் பைஅத்தும் கூட வாங்கியிருக்கவில்லை. முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாதவர்களும் முழு வலுவுடன் அவர்களை எதிர்த்தனர். இதுவரை அவ்வாறு அவர்கள் எதிர்த்து வருகின்றனர். இதில் அதிகமாக முஸ்லிம்களே முன்னணியில் இருந்து வருகின்றனர். ஆனால் அல்லாஹ் அவர்களது ஜமாஅத்தை வளர்ச்சியடையச் செய்து கொண்டிருக்கின்றான். இப்போது அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் உலகிலுள்ள 209 நாடுகளில் நிறுவப்பட்டிருக்கின்றது. குறிப்பாக நான் கூறியதுபோன்று முஸ்லிம் நாடுகளில் எங்கெல்லாம் மக்கள் ஜமாஅத்தின் பக்கம் அதிகம் கவனம் செலுத்துகின்றனரோ அங்கு முறையாக திட்டமிட்டவாறு ஜமாஅத்தை எதிர்ப்பது ஆரம்பமாகி விடுகின்றது. சில அரசியல்வாதிகளும், ஆலிம்களும், அவர்களின் தாக்கத்தின் கீழ் இருந்து வருகின்ற அரசு பணியாளர்களும் இன்னும் சொல்வதென்றால் நீதிமன்றங்களிலுள்ள நீதிபதியும் கூட இந்த எதிர்ப்பில் பங்கு பெற்றுள்ளனர்.

இன்றைய நாட்களில் அல்ஜீரியாவிலுள்ள அஹ்மதிகள் அநீதிக்கு ஆளாக்கப்படுகின்றனர். இந்த அப்பாவிகளையும் அநீதிக்கு ஆளாகியிருப்பவர்களையும் நாம் நமது துஆக்களில் நினைவில் வைக்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு உறுதியான பாதங்களுடன் நிலைநிற்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த அநீதிகளிலிருந்தும் அவர்களை பாதுகாப்பானாக! இவ்வாறே பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளையும் உங்களது துஆக்களில் நினைவில் வையுங்கள். அங்கும் கூட இன்றைய நாட்களில் குறிப்பாக பஞ்சாபில் முறையாக திட்டமிட்டு அநீதியிழைக்கப்படுகின்றது.

இந்த எதிர்ப்புகள் இதற்கு முன்னரும் எந்த சீர்குலைவையும் ஏற்படுத்திவிடவில்லை. வருங்காலத்திலும் இவை எந்த சீர்குலைவையும் ஏற்படுத்தி விட முடியாது - இன்ஷா அல்லாஹ். அல்லாஹ்வின் உதவி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் எப்போதும் இருந்து வந்திருக்கின்றது. எப்போதும் எதிரிகள் தோல்வியடைந்திருப்பதையே நாம் பார்த்துள்ளோம். இவ்வாறே இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றது. இனியும் இவ்வாறே நடக்கும். இவர்கள் ஓரிடத்தில் எதிர்த்தால் இறைவன் நூறு இடங்களில் தப்லீக் செய்வதற்கான புதிய களங்களை நமக்கு திறந்து தருகின்றான். அல்ஜீரியாவில் தங்களது எண்ணத்திற்கேற்ப இவர்கள் அஹ்மதிகளை அழிப்பதற்கு முயற்சி செய்தனர். பத்திரிகைகளிலும் ஏனைய ஊடகங்களிலும் இது பற்றி சர்ச்சை செய்யப்பட்டது. ஜமாஅத்திற்கு எதிரான செய்திகள் வெளியிடப்பட்டன. அவை பரப்பப்பட்டன. பத்திரிகைகளும் எதிர்ப்பில் தனது பங்கை முழுமையாக செலுத்தியது. ஆனால் இதே விஷயங்கள் ஜமாஅத்தின் தப்லீகிற்கான வழியாக ஆகி விட்டது.

புது அஹ்மதிகள் கொண்ட கொள்கையில் உறுதியாக நிலைத்திருப்பது, எதிர்ப்பின் விளைவாக மக்களுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டிருப்பது, தப்லீகிற்கான புது வழிகள் திறந்திருப்பது, எதிரிகளுக்கு அவர்களது தீய எண்ணங்களில் தோல்வி ஏற்பட்டிருப்பது, அல்லாஹ்வின் தரப்பிலிருந்து நல்ல இயல்புள்ள மக்களுக்கு உண்மையின் பக்கம் வழிகாட்டல் கிடைத்திருப்பது, மேலும் பல்வேறு நாடுகளில் இறைவனது உதவி மற்றும் ஆதரவு கிடைத்திருக்கின்ற ஒளிமயமான அடையாளங்கள் வெளிப்பட்டிருப்பது தொடர்பாக ஈமானுக்கு எழுச்சியூட்டக்கூடிய சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

டென்மார்க்கைச் சார்ந்த அஹ்மதி மதிப்பிற்குரிய ஹாஜி நூஹ் சுவந்து ஹேன்சன் (Haji Nuh Svend Hansen) சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**7 ஏப்ரல் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **7 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ۔ الرَّحْمٰنِ الرَّحِيمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّينِ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِينُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ۔ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ۔

முறையாக ஜமாஅத் நிறுவப்படாத அந்தக் காலத்திலிருந்தே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிர்ப்பு இருந்து வருகின்றது. அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் பைஅத்தும் கூட வாங்கியிருக்கவில்லை. முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாதவர்களும் முழு வலுவுடன் அவர்களை எதிர்த்தனர். இதுவரை அவ்வாறு அவர்கள் எதிர்த்து வருகின்றனர். இதில் அதிகமாக முஸ்லிம்களே முன்னணியில் இருந்து வருகின்றனர். ஆனால் அல்லாஹ் அவர்களது ஜமாஅத்தை வளர்ச்சியடையச் செய்து கொண்டிருக்கின்றான். இப்போது அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் உலகிலுள்ள 209 நாடுகளில் நிறுவப்பட்டிருக்கின்றது. குறிப்பாக நான் கூறியதுபோன்று முஸ்லிம் நாடுகளில் எங்கெல்லாம் மக்கள் ஜமாஅத்தின் பக்கம் அதிகம் கவனம் செலுத்துகின்றனரோ அங்கு முறையாக திட்டமிட்ட –வாறு ஜமாஅத்தை எதிர்ப்பது ஆரம்பமாகி விடுகின்றது. சில அரசியல்வாதிகளும், ஆலிம்களும், அவர்களின் தாக்கத்தின் கீழ் இருந்து வருகின்ற அரசு பணியாளர்களும் இன்னும் சொல்வதென்றால் நான் முன்னர் கூறியிருந்ததைப் போன்றே நீதிமன்றங் –களிலுள்ள நீதிபதியும் கூட இந்த எதிர்ப்பில் பங்கு பெற்றுள்ளனர்.

கடந்த பல குத்பாக்களில் நான் குறிப்பிட்டிருந்தது போன்றே இன்றைய நாட்களில் அல்ஜீரியாவிலுள்ள அஹ்மதிகள் அநீதிக்கு ஆளாக்கப்படுகின்றனர். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள், நானே வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றேன் என்ற வாதத்தில் பொய்யராக இருக்கின்றார் என்று கூறி, அவரை நீங்கள் மறுத்து, அவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அல்லர்; அவர் இஸ்லாத்தை எதிர்க்கும் சக்திகளின் ஏஜெண்டாக இருக்கிறார் என்பதையும், இஸ்லாத்தை எதிர்க்கும் சக்திகளின் ஆதரவும் மேற்கத்திய நாடுகளின் ஆதரவும் அவருக்கு இருக்கின்றது. அவர்கள் தரப்பிலிருந்தே அவர் நிறுத்தப்பட்டுள்ளார். குறிப்பாக ஆங்கிலேயர்கள் தரப்பிலிருந்து அவர் நிறுத்தப் பட்டுள்ளார் – நவூதுபில்லாஹ் என்பதையும் ஏற்றுக் கொள்ளும்பட்சத்தில் நாங்கள் உங்களை குற்றமற்றவர் என்று கூறி விடுதலை செய்து விடுவோம். அதை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் பிறகு சிறை தண்டனைக்கும் அபராதம் செலுத்துவதற்கும் நீங்கள் தயாராக இருங்கள் என்றே நீதிமன்றங்களிலுள்ள நீதிபதிகளும் அரசுப் பணியில் இருப்பவர்களும் கூறுகின்றனர். பிறகு அநீதியான தீர்ப்பைக் கூறி தங்களது ஈமானில் நிலைத்திருப்பவர்கள் அவர்கள் கூறுவதைக் கூற மறுக்கும்போது அவர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர். பெரும் பெரும் அபராதங் –களும் அவர்களுக்கு விதிக்கப்படுகின்றன. பெரும்பாலும் ஏழைகளாக இருக்கும் அம்மக்களுக்கு அவற்றை செலுத்துவதற்கான சக்தி இல்லை.

எந்நிலையிலும் இந்த அப்பாவிகளையும் அநீதிக்கு ஆளாகியிருப்பவர்களையும் நாம் நமது துஆக்களில் நினைவில் வைக்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு உறுதியான பாதங்களுடன் நிலைநிற்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த அநீதிகளிலிருந்தும் அவர்களை பாதுகாப்பானாக! இவ்வாறே பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளையும் உங்களது துஆக்களில் நினைவில் வையுங்கள். அங்கும் கூட இன்றைய நாட்களில் குறிப்பாக பஞ்சாபில் முறையாக திட்டமிட்டு அநீதியிழைக்கப் –படுகின்றது. முஸ்லிம் நாடுகளில் அவர்களது நாட்டிற்குள் இருக்கின்ற நாட்டுடன் இருக்கின்ற தொடர்புகளின் நிலைமைகளும் அறிவுள்ளவர்களுக்கு சிந்திப்பதற்குப் போதுமானதாக இருக்க வேண்டும். இத்தகைய நிலைமைகளில் அல்லாஹ் முஹம்மதிய உம்மத்தின் சீர்திருத்தத்திற்காக தனது வாக்குறுதிக்கேற்ப யாரை அனுப்ப வேண்டியது இருந்ததோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது எந்த உண்மை அடியாரின் வருகையைப் பற்றிய முன்னறிவிப்பைச் செய்திருந்தார்களோ அவரை அம்மக்கள் தேட வேண்டும். அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இது தொடர்பாக கூறியிருந்த அடையாளங்களும் கூட நிறைவேறி விட்டன; நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. அவை வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையுடன் தொடர்பு உடையதாகும். இந்த ஒரு வழியின் மூலமாக மட்டும் தான் முஸ்லிம்களின் மகத்துவத்தை மீண்டும் நிலைநாட்ட முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: “உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். இறைவனின் வாக்குறுதி உண்மையாகும். அவன் தனது வாக்குறுதிக்கேற்ப உலகில் எச்சரிக்கை செய்பவர் ஒருவரை அனுப்பியுள்ளான். உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் அவரை கண்டிப்பாக ஏற்றுக் கொள்வான். மிகவும் வலுவான தாக்குதல்கள் மூலமாக அவரது உண்மையை வெளிப்படுத்துவான். நான் உங்களிடம் உண்மையைக் கூறுகின்றேன். நான் இறைவனின் வாக்குறுதிக்கேற்ப அவன் புறமிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹாக வந்திருக்கின்றேன். நீங்கள் விரும்பினால் என்னை

ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் விரும்பினால் என்னை மறுத்து விடுங்கள். ஆனால் நீங்கள் மறுத்து விடுவதால் எதுவும் நடந்து விடாது. இறைவன் எதை நாடியுள்ளானோ அது நடந்தே தீரும்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 206; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இது தெளிவான விஷயமாகும். இறைவன் அவன் புறமிருந்து அனுப்பப்பட்டவனாகவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற பெயருடனும் என்னை உலகிற்கு அனுப்பியுள்ளான். எந்த மக்கள் என்னை எதிர்க்கின்றனரோ அவர்கள் என்னை அல்ல. மாறாக இறைவனை எதிர்க்கின்றனர்''. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 189-190; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே ஜமாஅத்திற்கு எதிராக நடக்கின்ற எதிர்ப்புகளைப் பார்க்கும்போது எதிர்க்கின்ற மக்கள் இறைவன் எதை விரும்புகின்றானோ அதற்கு எதிராக செயல்படுபவர்களாக இருக்கின்றனர். இவ்வாறு அவர்கள் அல்லாஹ்வையே எதிர்க்கின்றனர். இந்த எதிர்ப்புகள் இதற்கு முன்னரும் எந்த சீர்குலைவையும் ஏற்படுத்திவிடவில்லை. வருங்காலத்திலும் இவை எந்த சீர்குலைவையும் ஏற்படுத்தி விட முடியாது – இன்ஷா அல்லாஹ். அல்லாஹ்வின் உதவி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் எப்போதும் இருந்து வந்திருக்கின்றது. எப்போதும் எதிரிகள் தோல்வியடைந்திருப்பதையே நாம் பார்த்துள்ளோம். இவ்வாறே இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றது. இனியும் இவ்வாறே நடக்கும். இவர்கள் ஓரிடத்தில் எதிர்த்தால் இறைவன் நூறு இடங்களில் தப்லீக் செய்வதற்கான புதிய களங்களை நமக்கு திறந்து தருகின்றான்.

அல்ஜீரியாவில் தங்களது எண்ணத்திற்கேற்ப இவர்கள் அஹ்மதிகளை அழிப்பதற்கு முயற்சி செய்தனர். பத்திரிகைகளிலும் ஏனைய ஊடகங்களிலும் இது பற்றி சர்ச்சை செய்யப்பட்டது. ஜமாஅத்திற்கு எதிரான செய்திகள் வெளியிடப்பட்டன. அவை பரப்பப்பட்டன. பத்திரிகைகளும் எதிர்ப்பில் தனது பங்கை முழுமையாக செலுத்தியது. ஆனால் இதே விஷயங்கள் ஜமாஅத்தின் தப்லீகிற்கான வழியாக ஆகி விட்டது. அல்ஜீரியாவின் ஜமாஅத்தும் மிகவும் பழைய ஜமாஅத் அல்ல. ஆனால், அல்லாஹ் இந்த எதிர்ப்பின் மூலமாக எங்கு இந்த ஜமாஅத்தைச் சார்ந்தவர்களை அவர்களது ஈமானில் வலுவடையச் செய்துள்ளானோ அங்கு அவர்களுக்காக தப்லீகிற்கான வழிகளையும் திறக்கின்றான். அங்குள்ள அஹ்மதிகள் இவ்வாறு எழுதுகின்றனர். அதாவது நாங்கள் இந்த நாட்டில் தப்லீக் எப்படி நடக்கும்? என்று கவலையுடன் இருந்தோம். இந்த உணர்வு அவர்களிடன் இருந்தது. அல்லாஹ் இந்த எதிர்ப்பின் மூலமாக சுயமே இதற்கான ஏற்பாட்டை செய்து விட்டான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சில மக்கள் எதிர்மறையான தாக்கத்தைப் பெற்றுள்ளனர். அப்படிப்பட்டவர்களில் பெரும்பாலார் பெயர் தாங்கி ஆலிம்களின் பின்னால் செல்பவர்கள் ஆவர். ஆனால் பலரும் இவ்வாறும் உள்ளனர். பெரும் எண்ணிக்கையில் அப்படிப்பட்டவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு ஜமாஅத் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றிய அறிமுகம் கிடைத்துள்ளது. மேலும் ஜமாஅத்திற்கு எதிராக நடப்பவை எல்லாம் தவறாக நடக்கின்றன என்பதை அவர்கள் புரிந்துள்ளனர். இதன் காரணமாக சுயமே அவர்களே ஜமாஅத்தைப் பற்றிய தகவல்களைப் பெறுகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இதைத்தான் கூறியுள்ளார்கள். எதிர்ப்பும், நமக்கு எதிராக எழுதப்பட்டுள்ள நூல்களும் நமது ஜமாஅத்தின் நூல்களைப் படிக்குமாறு மக்களைத் தூண்டுகிறது. இதன் பக்கம் மக்களுக்கு கவனமூட்டுகின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 398; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இவ்வாறே அவர்கள் வர வேண்டிய சரியான நேரம் இந்த நேரம்தான். இறைவனது நியதிக்கேற்பவே அவர்கள் வந்துள்ளார்கள்.

இதன் மூலம் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற இஸ்லாமிய கப்பலைக் காப்பாற்ற முடியும் என்பதைப் பற்றி விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

''உண்மையான நபி, தூதர் மற்றும் முஜத்தித் (சீர்த்திருத்தவாதி)யின் பெரிய அடையாளம் இதுவாகும். அவர்கள் சரியான சமயத்தில் தோன்றுவார்கள். அவர்கள் தேவைப்படும் நேரத்தில் வருவார்கள். அவர்கள் மற்றவர்களைப் பார்த்து, மக்கள் ஆணையிட்டுக் கூறட்டும். வானத்தில் ஓர் ஆயத்தம் செய்யப்படுகின்ற ஒரு நேரமாக இந்த நேரம் இல்லையா?'' என்று கேட்கின்றனர். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 398; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆனால் இது இவர்களுக்கும் தெரியும். முஸ்லிம்களின் இந்த நிலைமைகள் ஒரு சீர்திருத்தவாதி வரவேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றது. இது தொடர்பாக இவர்களே கூறியுள்ள விஷயங்கள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. தமது சொற்பொழிவுகளிலும் இதைப் பற்றி அவர்கள் கூறுகின்றனர். இந்த நிலைமைகளைச் சரிசெய்வதற்கு முஸ்லிம் உம்மத்தை காப்பாற்றுவதற்கு ஒருவர் வர வேண்டும் என்ற விஷயத்திற்கு இவர்கள் சாட்சி பகர்கின்றனர். ஆனால் அத்துடன் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி அவர்களை தவிர வேறு யாராவது வர வேண்டும் என்பதையும் கூறுகின்றனர். எந்நிலையிலும் இறைவன் புறமிருந்து வந்துள்ளேன் என்று ஒருவர் வாதம் புரிகின்றார். அவரை இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக அவரை இவர்கள் மறுக்கின்றனர். அவரிடம் பகைமை பாராட்டுகின்றனர். இந்த பெயர் தாங்கி ஆலிம்கள் எல்லா இடங்களிலும் குறிப்பாக முஸ்லிம் நாடுகளில் இந்த எதிர்ப்பு பணியை செய்து கொண்டே செல்கின்றனர். ஆனால் இதற்கு எதிரில் அல்லாஹ் உலகில் தனது தூதுச் செய்தியை எட்ட வைக்க விரும்புகின்றான். அதை ஏற்றுக் கொள்ள வைக்கவும் விரும்புகின்றான் என்பதை நாம் பார்க்கின்றோம். அவனது விதி இது தொடர்பான தனது பணியைச் செய்கின்றது. இலட்சக்கணக்கான மக்கள் இந்த எதிர்ப்பு இருந்தும் கூட ஒவ்வொரு வருடமும் ஜமாஅத்தில் இணைகின்றனர் என்பது அல்லாஹ்வின் ஆதரவும் உதவியும் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் இருக்கின்றது மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இருக்கின்றன என்பதற்கான ஆதாரமாக இருக்கின்றது. பலரும் இது தொடர்பாக தங்களது சம்பவங்களை எனக்கு எழுதுகின்றனர். அவர்கள் எவ்வாறு அஹ்மதிகளாக ஆனார்கள் என்பதைப் பற்றி எழுதுகின்றனர். அந்த சம்பவங்களைப் படித்து வியப்பு ஏற்படுகின்றது. எவ்வாறு இறைவன் நல்லியல்பு கொண்டவர்களுக்கு ஜமாஅத்தை ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாட்டைச் செய்கின்றான்? என்பதைப் பார்க்க முடிகின்றது. சில சம்பவங்களை இப்போது நான் எடுத்து கூறுவேன்.

நான் இப்போது கூறுகின்ற முதல் சம்பவம் அல்ஜீரியாவுடன் தொடர்புடையதாகும். நான் ஏற்கனவே கூறியது போன்றே அங்கு இப்போது கடுமையான எதிர்ப்பு இருந்து வருகின்றது. ஒருவர் இவ்வாறு எழுதுகின்றார்: அஹ்மதிய்யத்தை பற்றிய அறிமுகம் கிடைப்பதற்கு வெகு காலம் முன்னரே நான் ஒரு நாள் இரவில் கனவில் பார்த்தேன். உயர்வான கூரையை உடைய விரிவான நீளமான ஒரு ஹாலில் பல மக்களுடன் நான் ஒரு வரிசையில் நிற்கின்றேன். அந்த வரிசையின் ஒரு பக்கத்தின் இறுதியில் இரு நபர்கள் நிற்கின்றனர். எங்களது வரிசையில் நிற்பவர்களில் ஒவ்வொருவரும் தங்களது முறை வரும்போது அந்த இரு நபர்களில் எவர் வலப்புறம் நிற்கின்றாரோ அவரிடம் மிகவும் ஆர்வத்துடனும் ஆவலுடனும் முஸாஃபா செய்து விட்டு ஹாலின் கதவுகளின் பக்கம் சென்று விடுகின்றனர். இந்த நீண்ட வரிசை இந்த இரு நபர்களில் ஒருவரைச் சந்திப்பதற்காக குறிப்பாக உருவாக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகின்றது. நான் தூரத்திலிருந்தே இந்தக் காட்சியைப் பார்த்தவாறு மக்கள் இரண்டு பேர்களையும் முஸாஃபா செய்வதற்குப் பதிலாக ஒரு நபரை மட்டும் முஸாஃபா செய்கின்றனர் என்று கூறுகின்றேன். இருவரிடமும் ஏன் முஸாஃபா செய்யவில்லை என்று கேட்கின்றேன். அருகில் வந்ததும் நான் பார்க்கின்றேன். அவர்களில் ஒருவர் வெந்நிற தாடியை உடையவராக இருக்கின்றார். வலதுபுறம் நிற்கின்ற நடுத்தர உயரமுடைய கோதுமை நிறத்திலுள்ள நபரது தலை மற்றும் தாடியின் முடி கருப்பாக இருக்கின்றது. எனது முறை வந்தபோது நான் வெள்ளை நிற தாடியை உடைய நபரது பக்கம் எனது கையை நீட்டியபோது அவர் கறுப்பு தாடியுள்ள கோதுமை நிறத்தை உடைய அந்த நபரைச் சுட்டிக் காட்டியவாறு அவருக்கு ஸலாம் கூறுங்கள் என்று கூறினார். நான் மிகவும் ஆர்வத்துடன் அவரை முஸாஃபா செய்தேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அத்துடன் எனது உள்ளம் அவர் மீதுள்ள அன்பில் தன்னை விற்று விட்டது. அந்த நபர் என்னை புன்சிரிப்புடன் பார்த்தார். அந்த புன்னகையில் எத்தகைய மந்திரம் இருந்தது என்றால் இன்றுவரை என்னால் அந்தப் புன்னகையை மறக்க முடியாது. பிறகு கூறுகின்றார்கள்: அஹ்மதிய்யத்தைப் பற்றிய அறிமுகம் எனக்கு கிடைத்து நான் M.T.A பார்க்க ஆரம்பித்ததும் அந்த ஆரம்ப நாட்களில் ஒருநாள் அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புகைப்படம் காட்டப்பட்டது. அதற்குப் பிறகு சிறிது நேரம் கழிந்ததும் எனது குத்பா பேருரை வந்து கொண்டிருந்தது. எனது புகைப்படம் முன்னால் வந்தது. இந்த இரண்டு காட்சிகளையும் பார்த்ததும் எனக்கு எனது கனவு நினைவிற்கு வந்தது. கனவில் வெள்ளை நிறத் தாடியுள்ள நபராக எனக்கு காட்டப்பட்டது தாங்கள் ஆவீர்கள் என்று என்னைப் பற்றி அவர்கள் கூறியுள்ளார்கள். பிறகு கனவில் காட்டப்பட்ட கருப்பு தாடியையுடைய நபர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆவார்கள். அவர்களை எல்லா மக்களும் சந்திக்கின்றனர். நானும் அவர்கள் பக்கமே சைகையாகச் சுட்டிக் காட்டியவாறு அவரை சந்தியுங்கள் என்று கூறுகின்றேன்.

அவர் தொடர்ந்து கூறுகின்றார்: அதற்குப் பிறகு நான் அஹ்மதிகளுடன் இன்டெர்நெட்டில் தொடர்பு வைத்தேன். பல்வேறு கேள்விகளை அவர்களிடம் கேட்டேன். அதற்கான பதில் எனக்கு கிடைத்த பிறகு நான் பைஅத் செய்து விட்டேன். பிறகு இன்னொரு நபர் தமது சம்பவத்தை எழுதியுள்ளார். அந்த சம்பவத்தைப் பார்க்கும்போது அல்லாஹ் அவரை சூழ்ந்து நின்றவாறு அவரை ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்ய வைக்கின்றான் என்பது போல் தோன்றுகிறது. அவரது ஏதாவதொரு நல்ல விஷயம் அல்லாஹ்விற்கு பிடித்திருக்கின்றது. இவர் எகிப்தைச் சார்ந்தவராவார். இவரது பெயர் அப்துல் ஹாதி ஆகும். இவர் கூறுகின்றார்: எனக்கு M.T.A அல் அரபிய்யா மூலமாக அஹ்மதிய்யத் பற்றிய அறிமுகம் ஏற்பட்டது. அதில் காட்டப்பட்ட நிகழ்ச்சி மிகவும் நன்றாக இருந்தது. அது அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் அவர்களது நபித்துவம் மற்றும் அன்னாருக்கு வஹி மற்றும் இல்ஹாம் இறங்குவது பற்றி எனக்கு புரியாமல் இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றிய இந்த விஷயத்தில் அவருக்கு சந்தேகம் இருந்தது. அவர் கூறுகின்றார்: அல் ஹிவாருல் முபாஷிர் என்ற நிகழ்ச்சிக்கு தொலைபேசியின் மூலம் தொடர்பு கொள்ள நான் பல முறை முயற்சி செய்தும் கூட

ஒவ்வொரு முறையும் எனக்கு அதில் தோல்வி ஏற்பட்டது. எனக்கு தொடர்பு கிடைக்காமல் இருந்தது. ஃபோன் செய்ததன் நோக்கம் என்னவாக இருந்தது? கூறுகின்றார்கள்: ஒரே ஒரு கேள்வியைக் கேட்பது மட்டுமே எனது நோக்கமாக இருந்தது. அதற்கு ஆம் அல்லது இல்லை என்று பதில் கூறுவதை மட்டுமே அவர் எதிர்பார்த்திருந்தார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஏனைய நபிமார்களைப் போன்று பாவமற்றவரா? அவர் இறைவனது வஹியையும், இல்ஹாமையும் பெற்றவரா? என்பதுதான் கேள்வியாக இருந்தது.

அவர் கூறுகின்றார்: எனது கேள்விக்கு ஆம் என்று பதில் கூறப்பட்டிருந்தால் அந்த நாளே நான் அந்த சேனலை எனது பட்டியலிலிருந்து நீக்கி இருப்பேன். அதை Delete செய்திருப்பேன். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிறகு வஹி வருவது நின்று விட்டது என்பதே அப்போது எனது கொள்கையாக இருந்தது. அவ்வாறு வஹி வருவதாக வாதிப்பவர் பொய்யராவார் என்று நான் கருதினேன். ஆனால் இறைவனின் குறிப்பான வல்லமையின் காரணமாக நிகழ்ந்தது என்னவென்றால் நான் இந்த நிகழ்ச்சிக்கு போன் செய்த போதெல்லாம் எனக்கு தொடர்பு கிடைப்பதில் என்னால் வெற்றி பெற முடியவில்லை. இதன் விளைவு என்னவாயிற்று என்றால் நான் தொடர்ந்து M.T.A -வைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதன் விளைவாக எல்லா விஷயங்களுடன் சேர்ந்து கதமுன்னுபுவ்வத் பற்றிய விஷயமும் எனக்கு புரிய வந்தது. எதுவரை என்றால் எனக்கு முன்னால் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான இக்காலத்தின் இமாம் அவர்களிடம் பைஅத் செய்வதைத் தவிர எனக்கு வேறு எந்தவொரு வழியும் தெரியவில்லை. அதனால் நான் பைஅத் படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்பி விட்டேன். பைஅத் செய்த பிறகு இந்த செய்தியை மற்றவர்களுக்கும் எட்ட வைக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். இதற்காக நான் எனக்கு நெருக்கமான நண்பர் ஒருவரை தேர்ந்தெடுத்தேன். அவரைப் பற்றி நான் கூறுவதைக் கேட்பார் என்று எனக்கு மிகுந்த நல்லெண்ணம் இருந்தது. நான் அவருக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தேன். ஆனால் எனது எதிர்பார்ப்பிற்கு மாற்றமாக அவர் என் மீது கடுமையான கோபத்தை வெளிப்படுத்தியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மகிமைக்கு எதிராக அவமரியாதையாகப் பேச ஆரம்பித்தார். வேறு வழியில்லாமல் நான் அவரை விட்டு விட்டு மிகவும் துக்கம் நிறைந்த உள்ளத்துடனும் அமைதியற்ற ஆன்மாவுடனும் சுமையான பாதங்களுடன் நடந்தவாறு எனது வீட்டிற்கு திரும்பி வந்தேன் என்று இவர் கூறுகின்றார். பிறகு எனது வழக்கத்திற்கேற்ப டி.வி –ஐ ON செய்ததும் M.T.A -வில் சூரா ஆல இம்ரானின் இந்த வசனம் ஓதப்பட்டுக் கொண்டிருந்தது.

فَاِنْ كَذَّبُوْكَ فَقَدْ كُذِّبَ رُسُلٌ مِّنْ قَبْلِكَ

جَآءُوْ بِالْبَيِّنٰتِ وَالزُّبُرِ وَالْكِتٰبِ الْمُنِيْرِ

“அவர்கள் உம்மை பொய்ப்படுத்துகின்றனர் என்றால் முன்னர் வந்த தூதர்களும் பொய்யாக்கப் – பட்டிருந்தனர். அவர்கள் தெளிவான அடையாளங் – களையும், ஞான நூல்களையும், ஒளிமயமான வேதத்தையும் கொண்டு வந்தனர்''. (3:185)

கூறுகின்றார்கள்: இந்த வசனம் எனது உள்ளத்திற்கு நிம்மதியையும் சாந்தியையும் தரக் கூடியதாக ஆகி விட்டது. இது தற்செயலாக நடந்த ஒன்றல்ல. மாறாக, இறைவன் புறமிருந்து எனக்காக வழங்கப்பட்ட தூதுச் செய்தியாக இது இருக்கின்றது. அதாவது தூதர்கள் பொய்யாக்கப்படுவதும் பரிகாசம் செய்யப்படுவதும் தொடர்ந்து நடந்துள்ளது. பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடனும் அவ்வாறு நடக்கின்றது என்றால் இது ஒன்றும் ஒரு புதிய விஷயமல்ல. ஆனால் நபிமார்களுக்கு இத்தகைய நிலைமை இருந்தும் கூட இறைவனின் ஆதரவு மற்றும் உதவியினால் அவர்கள் வெற்றி பெறுவது உலகில் இறைவனின் இருப்பிற்கு ஒரு மகத்தான ஆதாரமாகவும், அவர்களின் உண்மைக்கான தெளிவான ஆதாரமாகவும் இருக்கின்றது.

அவர் கூறுகிறார்: இவ்வாறு நான் சிந்தித்ததன் விளைவாக எனது முந்தையை நிலைமை என்னை விட்டு அகன்று விட்டது. இறைவனின் இந்த அருளுக்கு நன்றி செலுத்தும் உணர்வுகள் என்னிடம் உருவாகி விட்டன. அவன் அவனால் அனுப்பப்பட்ட காலத்தின் இமாமிடம் பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்கியுள்ளான். அவரை மறுப்பவர்களில் ஒருவராக என்னை அவன் ஆக்கவில்லை.

பாருங்கள்! நல்லியல்பு கொண்ட ஒரு மனிதரை அல்லாஹ் காப்பாற்றி விட்டான். ஆனால் மற்றவரிடம் இது போன்ற நிலைமை இல்லை. அவர் மீது அல்லாஹ்வின் அருள் இல்லை. அவரிடம் நல்ல தாக்கமும் ஏற்படவில்லை. அது மட்டுமல்லாமல் தனது பேறிழந்த நிலைமையின் காரணமாக அவர் அவமரியாதையாக நடந்து கொள்பவராகவும் ஆகி விட்டார். எவர் பைஅத் செய்தாரோ அவருக்கு திருப்தியும் ஆறுதலும் அளிக்கும் வகையிலுள்ள ஏற்பாட்டையும் அல்லாஹ் உடனே செய்து விட்டான். அவரை திருப்தி அடையச் செய்தது மட்டுமல்லாமல் அவருக்கு ஏற்பட்ட துன்பத்தையும் அவன் அகற்றி விட்டான்.

பிறகு ஒரு பெண் பற்றிய சம்பவம் உள்ளது. அவருடைய நல்லியல்பின் காரணமாக அல்லாஹ் அவருக்கு பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்கினான். முஸ்லிம்கள் தொடர்பாக தீவிரவாதம் பற்றிய பொதுவான கருத்து இருந்தும் கூட அதன் காரணமாக இந்தப் பெண்ணுக்கு நம்மைப் பற்றியும் அச்சம் இருந்தும் கூட அல்லாஹ் எத்தகைய வழிவகைகளை அவருக்காக செய்தான் என்றால் ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு கிராமத்தில் வசிக்கின்ற இந்தப் பெண்ணுக்கு, கீனியிலுள்ள ஒரு பெரிய நகரமான போக்கோவிற்கு அருகில் வசித்து வந்த இந்தப் பெண்ணுக்கு அல்லாஹ் எவ்வாறு நேர்வழி காட்டியுள்ளான்? இவரது பெயர் ஹாஜா ஹாமி ஃபதீகா ஆகும்.

இவர் கூறுகின்றார்: ஒருநாள் இவரிடம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒரு முஅல்லிம் வந்தார். ஜமாஅத்தைப் பற்றி அவருக்கு தப்லீக் செய்தார். அந்த நாட்களில் அங்கு மாநாடு நடைபெற்றது. ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அவர் இவருக்கு அழைப்பு விடுத்தார்.

அந்தப் பெண் கூறுகின்றார்: வெளிப்படையாகப் பார்க்கும்போது அவர் கூறிய தூதுச் செய்தி நன்றாக இருந்தது. முதலில் நான் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தயாரானேன். எனது வண்டியில் பெட்ரோல் போட்டேன். நல்ல வசதி படைத்த பெண்ணாக இவர் இருந்தார். ஆனால் இந்த நாட்களில் இஸ்லாமிய அமைப்புகளினால் ஏற்பட்ட தீவிரவாத சம்பவங்களின் காரணமாக இந்த ஜமாஅத்தும் ஒருவேளை இப்படித்தான் இருக்குமோ என்று நான் எண்ணினேன். இதனால் மாநாட்டிற்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை நான் கை விட்டு விட்டேன். அங்கு என்ன நடக்குமோ என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆனால், உள்ளத்தால் இறைவா! இந்த மக்கள் உண்மையாளர்களாக இருந்தால் இவர்கள் மீண்டும் எங்கள் கிராமத்திற்கு தப்லீக் செய்வதற்காக வர வேண்டும் என்று அந்தப் பெண் துஆ செய்ய ஆரம்பித்தார். பிறகு இறைவன் என்ன செய்தான் என்றால் இது தொடர்பாக ஒருவர் இவ்வாறு எழுதியுள்ளார்: சிறிது காலம் கழிந்த பிறகு எங்களது தப்லீக் குழு எவ்வித நிகழ்ச்சியும் இல்லாத நிலையில் இதே கிராமத்திற்கு மீண்டும் சென்றது. அந்தப் பெண் எங்களைப் பார்த்ததும் மகிழ்ச்சியால் அவரது கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. அந்தப் பெண் அல்லாஹ் எனது துஆவை ஏற்றுக் கொண்டான் என்று கூறினார். இவ்வாறு இவரது முழு குடும்பமும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தது. சில மக்கள் மீது அல்லாஹ் கருணை காட்டுகின்றான். அவர்களுக்கு பொருளாதார பயன்களைக் கிடைக்குமாறு செய்து அவர்களது ஈமானில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி தன்னால் அனுப்பப்பட்ட தூதரை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பையும் வழங்குகின்றான். ஆனால் இவ்வாறு நிபந்தனை வைப்பது சரியல்ல.

சிலர் இவ்வாறு எழுதுகின்றனர்: அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வது அல்லாஹ்வுக்கு நீங்கள் செய்யும் நன்மை அல்ல. அவ்வாறே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு செய்யும் நன்மையும் அல்ல. தமது இம்மையையும் மறுமையையும் அவர் சரி செய்ய வேண்டியது இருக்கின்றது. எனவே, இறைவனின் தூதுச் செய்தியைக் கேட்பதும் புரிவதும் அதை ஏற்றுக் கொள்வதும் அவசியமானதாகும். எவ்வாறிருப்பினும், ஒரு சம்பவம் இவ்வாறு உள்ளது. அல்லாஹ் எவர் மீதாவது அருள் செய்ய விரும்பினால் இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ளவும் செய்கின்றான். அது நிறைவேறுவதை அவர்களுக்கு காட்டவும் செய்கின்றான்.

கேம்பியாவின் அமீர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நயாமீனி மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தைச் சார்ந்த சன்தூ சாஹிபா அவர்கள் ஜமாஅத்தைக் கடுமையாக எதிர்த்து வந்தார்கள். அவர் முன்னால் எப்போது ஜமாஅத் பெயர் கூறப்பட்டாலும் அவருக்கு கடுமையான கோபம் வரும். ஜமாஅத்திற்கு எதிராக மிகவும் கடுமையான வார்த்தைகளை அவர் பயன்படுத்தி வந்தார். அஹ்மதிகள் காஃபிர்கள். இவர்கள் சுயமே நரகத்திற்குச் செல்வர். யார் இவர்களோடு தொடர்பு வைப்பார்களோ அவர்களும் நரகத்திற்குச் செல்வர் என்று அவர் கூறி வந்தார். இந்தப் பெண் விவசாயம் செய்து வந்தார். ஆனால், கடந்த இரண்டு வருடங்களாக இவர்களது விளைச்சல் சேதமடைந்தது. சில நேரங்களில் அவற்றில் பூச்சிகள் வந்து சேதமடைந்தன. சில நேரங்களில் விலங்குகள் வந்து விளைச்சலை சேதப்படுத்தின. இதற்கு என்ன காரணம் என்று அவருக்கு புரியாமல் இருந்தது.

அவர் கூறுகின்றார்: நமது அஹ்மதி சகோதரி ஒருவர் அவரிடம், பாருங்கள்! எப்போதிருந்து நீங்கள் ஜமாஅத்தை எதிர்த்து வருகின்றீர்களோ அப்போதிருந்து உங்கள் விளைச்சல் சேதமடைந்து வருகின்றது. நீங்கள் ஜமாஅத்தை எதிர்ப்பதை விட்டு விட்டு ஜமாஅத்தில் இணைந்து விட்டால் அல்லாஹ் அருள் செய்வான் என்று கூறினார். அந்தப் பெண்ணுக்கு அப்போதே அதுபற்றி புரிய வந்தது. இதை நமது அனுபவம் மூலமாக பார்ப்போம் என்று எண்ணி அந்தப் பெண் தனது குடும்பத்திலுள்ள 8 நபர்களுடன் ஜமாஅத்தில் இணைந்தார். ஜமாஅத்தில் இணைந்த பிறகு அல்லாஹ் அவர் மீது அதிகமாக அருள் புரிந்திருப்பதை அவர் பார்த்தார். அவரது விளைச்சல் முழுமையாக இருந்தது மட்டுமல்லாமல் கடந்த பல வருடங்களாக காணாமல் போயிருந்த இளைஞரான அவரது மகனுடனும் அவருக்கு தொடர்பு ஏற்பட்டது. அவர் இத்தாலியிலிருந்து வந்தார். இப்போது இந்தப் பெண் எல்லாரிடமும் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து விடுங்கள். இதில்தான் உங்களுக்கு இரட்சிப்பு இருக்கின்றது என்று கூறி வருகின்றார்கள்.

பெனினிலிருந்து ஜமாஅத்தின் முபல்லிக் அவர்கள் எழுதுகின்றார்கள்: இந்த வருடம் மழை பெய்கின்ற மாதத்தில் வாஸிலா நகரத்தில் கடுமையாக பெருமழை பெய்தது. இதன் காரணமாக மிஷன் ஹவுஸின் ஒரு சுவர் விழுந்து விட்டது. இரவிலும் மழை பெய்து கொண்டிருந்தது. இன்னொரு சுவரும் விழுந்து விடலாம் என்ற அபாயம் இருந்தது.

அவர் கூறுகிறார்: மிஷன் ஹவுஸிற்கு ஏற்பட்ட ஜமாஅத் அளவிலான இந்த இழப்பின் காரணமாக நான் மிகவும் கவலையடைந்தேன். அப்போது எனக்கு இப்படியொரு எண்ணம் வந்தது. இத்தகைய எண்ணமும் கூட நமது முபல்லிக்குகளுக்குதான் வர முடியும்.

முபல்லிக் சாஹிப் கூறுகின்றார்கள்: இறைவா! நீ இந்த இழப்பை பைஅத்துகள் மூலமாக நிறைவு செய்வாயாக. மேலும் ஜமாஅத்திற்கு ஏற்படும் முன்னேற்றத்தில் பரக்கத்தை ஏற்படுத்துவாயாக என்று நான் துஆ செய்தேன்.

கூறுகின்றார்: நான் துஆ செய்து முடிக்க வில்லை. அப்போது தொலைபேசி மணி அடித்தது. அப்போது இரவு 12.00 மணியாக இருந்தது. கடுமையான இடியோசையும் இருந்தது. நான் தொலைபேசியை எடுத்ததும் முஹம்மது என்ற பெயரில் ஒரு நபர் பேசினார். அவர் கூச்சா என்ற பெயரிலுள்ள ஒரு கிராமத்திலிருந்து பேசினார். கிராமத்தில் உள்ளவர்கள் பைஅத் செய்ய விரும்புகின்றனர் என்று அவர் கூறினார். மிஷன் ஹவுஸிலிருந்து அந்த கிராமம் 110 கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது.

அவர் கூறுகின்றார்: அடுத்த நாளோ அல்லது சில நாட்கள் கழிந்தோ நான் அவரிடம் சென்றேன். அங்கு 198 பேர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தனர். கடுமையான எதிர்ப்பு இருந்தும் கூட இவர்கள் அனைவரும் தமது ஈமானில் உறுதியான பாதங்களுடன் நிலைத்து நிற்கின்றனர்.

ஜெர்மனியிலிருந்து அங்குள்ள முபல்லிக் எழுதுகின்றார்கள்: சிரியாவைச் சார்ந்த ஒரு குடும்பத்துடன் ஏறக்குறைய ஒரு வருடமாக இவர்களுக்கு தொடர்பு இருந்து வந்தது. கடந்த வருடம் ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் இவர்கள் கலந்து கொண்டனர். மாநாட்டின் சுற்றுச் சூழலைப் பார்த்து மிகுந்த தாக்கத்திற்கு இவர்கள் ஆளாகினர். ஆனால் இவர்கள் பைஅத் செய்யவில்லை.

சிரியாவைச் சார்ந்த இந்த குடும்பத்தினர் சுயமே இவ்வாறு கூறுகின்றனர்: நாங்கள் இத்தாலி வழியாக ஜெர்மனிக்கு வந்ததால் எங்களது வழக்கறிஞர் எங்களிடம் உங்கள் தரப்பிலிருந்து செய்யப்பட்ட வாதம் மிகவும் பலவீனமாக இருக்கின்றது. எனவே, நீங்கள் ஒருவேளை இத்தாலிக்கு திரும்ப அனுப்பப்படலாம் என்று கூறினார். மாநாட்டிற்குப் பிறகு எங்களுக்கு இது பற்றிய கடிதம் வரும் என்ற எதிர்பார்ப்பில் நாங்கள் இருந்தோம். ஆனால் வீட்டிற்கு வந்ததும் நீதிமன்றத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் நீங்கள் இத்தாலி வழியாக ஜெர்மனிக்கு வந்துள்ளீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும் என்று எழுதப்பட்டிருந்தது. ஆனால் அத்துடன் இந்த கடிதத்தில் நீதிபதி தரப்பிலிருந்து Remark –ம் எழுதப்பட்டிருந்தது. நீங்கள் சிரியாவைச் சார்ந்தவர் –களாக இருப்பதால் உங்களை ஜெர்மனியிலிருந்து வேறு எங்கும் அனுப்ப வேண்டிய தேவையில்லை என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

அவர்கள் கூறுகின்றனர்: இது எனக்கு ஓர் அற்புதமாக இருந்தது. இது ஆண்டு மாநாட்டிற்காக சென்றதனால் கிடைத்த அருளாகும் என்ற எண்ணம் உடனடியாக உள்ளத்தில் ஏற்பட்டது. நான் எனது மனைவியிடம் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டதன் விளைவாக இறைவன் இந்த அற்புதத்தை நமக்கு காட்டியுள்ளான் என்று கூறினர். அதற்குப் பிறகு இவையெல்லாம் ஜமாஅத்தின் காரணமாகத்தான் நடந்தது என்ற எண்ணம் இவர்களது உள்ளத்தில் ஏற்பட்டதால் உடனடியாக அவர்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்கள். நேர்வழியை வழங்குவதற்காக அல்லாஹ்வின் வழிமுறைகளும் வியக்கத்தக்கதாக இருக்கின்றன. ஆப்பிரிக்காவில் தப்லீக் செய்வதும் கூட எளிதான விஷயமல்ல; மிகவும் கடினமான விஷயமாகும். இது பற்றிய பல சம்பவங்களை நான் கூறியுள்ளேன். ஆனால் இவர்கள் படிக்காதவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பதால் எளிதாக இவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்கின்றனர் என்று மக்கள் நினைக்கின்றனர். ஆனால், இது முற்றிலும் தவறான விஷயமாகும். பெயர் தாங்கி ஆலிம்கள் தங்களது அன்றாட உணவிற்கான வழிவகையைச் செய்து கொள்ளவும் தங்களது தனித்தன்மையை நிலைநாட்டுவதற்காகவும் இந்த படிக்காத மக்களை நூதனமான சடங்குகளிலும் பித்அத்துகளிலும் ஆழ்த்தியுள்ளனர். அந்த ஆலிம்களுக்கு பின்னால் செல்பவர்கள் அவர்களை விட்டும் பிரிய விரும்புவதில்லை. அவர்களின் காரணமாகத்தான் ஜமாஅத்திற்கு எதிர்ப்பும் இருந்து வருகின்றது. ஒன்றிரண்டு சம்பவங்களை இதற்கு முன் நான் கூறியிருந்தேன். அங்கு ஆப்பிரிக்காவில் மக்கள் எதிர்க்கவும் செய்கின்றனர். எனவே அங்கும் கூட அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வது என்பது அந்த அளவு எளிதான காரியமல்ல. ஆனால் அவ்வாறிருந்தும் கூட அல்லாஹ் மக்களுக்கு வழிகாட்டுவதற்கான வழிவகைகளை அங்கு உருவாக்கிக் கொண்டே இருக்கின்றான். நமது முபல்லிக்குகளும் முஅல்லிம்களும் எவ்வாறு அங்கு தப்லீக் செய்ய வேண்டும் என்றும் அவனே வழிகாட்டுகின்றான்.

ஐவரிகோஸ்டின் முபல்லிக் சாஹிப் அவர்கள் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: சான்பெட்ரோவில் அங்குள்ள உள்ளூர் முஅல்லிம் தப்லீக் செய்வதற்காக சென்றார். அதன் விளைவாக அந்த கிராமத்தைச் சார்ந்த இமாம் அவர்களையும் சேர்த்து மொத்தம் 15 பேர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டனர். அதற்குப் பிறகு இந்த இமாம் ஐவரிகோஸ்டில் நடைபெற்ற National Jalsa Salana –வில் கலந்து கொண்டார். அதன் மூலம் ஜமாஅத்திலுள்ள நபர்களை அருகில் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என்று அவர் கருதினார். மாநாட்டைப் பார்த்து அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். பள்ளிவாயிலுக்காக தனது ஒரு பிளாட்டையும் அவர்கள் வழங்கினார்கள். ஆனால் இவர்கள் அனைவரும் நகரத்திலுள்ள ஒரு பெரிய இமாமின் கீழ் இருந்து வந்தனர். கிராமத்தில் இதற்கு முன்னர் ஜுமுஆ தொழுகை நிறைவேற்றப்படாமல் இருந்து வந்தது. அங்கு இமாம் இருந்தும் கூட ஜுமுஆ தொழுகை நடக்கவில்லை. நகரத்திலிருந்து பெரிய இமாமை அழைத்து பசு அல்லது மாட்டை அறுத்து அவருக்கு விருந்து கொடுத்தால்தான் ஜுமுஆ தொழுகை நடைபெறும் அல்லது அங்கு ஜுமுஆ தொழுகை நடத்த முடியாது என்று அதற்கான காரணம் கூறப்பட்டது. இத்தகைய நூதனமான பித்அத்துகளை அங்கு அவர்கள் உருவாக்கி வைத்திருந்தனர். மக்களுக்கு நேரம் கிடைக்கும்போது பல்வேறு இடங்களிலிருந்து அவருக்கு விருந்திற்கான அழைப்பு வரும்போது மவ்லவி சாஹிப் அவருக்குரிய முறை வரும்போது அங்கு சென்று ஜுமுஆ தொழுகையை நடத்துவார்கள். நம்பிக்கை கொண்ட ஒருவரது அடிப்படைக் கடமையாக இருக்கின்ற ஜுமுஆ தொழுகையை தொழுவதிலிருந்தும் இந்த காரணத்தால் அவர்கள் விலக்கி வைக்கப் –பட்டிருந்தனர். நபிமொழியில் எவர் தொடர்ச்சியாக மூன்று ஜுமுஆக்களை விட்டு விடுவாரோ அவரது உள்ளத்தில் கறை படிந்து விடும் என்ற கூறப்பட்டிருக் –கின்றது. (சுனன் இப்னு மாஜா கிதாபு இகாமதிஸ் ஸலாத்தி பாபு ஃபீமன் தரகல் ஜும்அதி மின் கைரி உஸ்ரின் ஹதீஸ் 1125) இது இந்த மவ்லவிமார்களின் புதிய ஷரீஅத்தாக இருந்தது. கிராமத்தைச் சார்ந்த சிறிய மவ்லவி சாஹிப் அவர்களிடம் ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றுவதற்கு இவையெல்லாம் அவசியமான –தல்ல என்று கூறப்பட்டபோது இந்த இமாம் தனது கிராமத்திற்குத் திரும்ப சென்று அங்குள்ள மக்களிடம் நாம் ஜுமுஆ தொழுகையை தொழ முடியும். அதில் எந்தத் தடையும் இல்லை. பெரிய மவ்லவியை அழைத்து விருந்து கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஜுமுஆ தொழ முடியும் என்பது கண்டிப்பானது அல்ல என்பதைப் புரிய வைக்க முயற்சி செய்தபோது அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளாத அந்த கிராமத்தைச் சார்ந்த மற்ற மக்கள் அவரை எதிர்க்க ஆரம்பித்தனர். இமாம் சாஹிப் அவர்களுக்கு அவர் இருக்கும் பள்ளிவாயிலில் ஜுமுஆ தொழுகையை தொழ வைப்பதற்கான அனுமதியை அவர்கள் வழங்கவில்லை. இதனால் ஒரு தற்காலிக சிறு கூரை வீட்டை அமைத்து இமாம் சாஹிப் அவர்கள் சில அஹ்மதிகளுடன் அங்கு ஜுமுஆ தொழுகையை நடத்தினார். தீங்கு விளைவிக்கும் சிலர் இந்த கூரை வீட்டை உடைத்து விட்டனர்.

இவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு நானும் உள்ளூர் முஅல்லிம் அவர்களும் சில அஹ்மதி சகோதரர்களும் அவர்களை எங்களுடன் அழைத்துக் கொண்டு கிராமத்தின் Chief இடம் சென்றோம். எல்லா விஷயங்களையும் அவருக்கு விளக்கமாக எடுத்துக் கூறினோம். பள்ளிவாயிலில் உள்ளவர்கள் நீங்கள் பள்ளிவாயிலில் தொழுவதற்கு அனுமதி தரவில்லை என்றால் நீங்கள் வேறு ஏதாவது ஓரிடத்தில் தொழுங்கள். இரண்டு இடங்களில் தொழுகை நடக்கும்போது அவற்றில் எந்த பள்ளிவாயிலுக்குச் சென்று தொழ வேண்டும் என்பதை மக்களே முடிவு செய்து கொள்வார்கள் என்று கிராமத்தின் Chief அவர்கள் தீர்ப்பு கூறினார்.

கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருளால் இந்தக் கிராமத்தில் இப்போது அஹ்மதிய்யத்தின் காரணமாக முறையாக ஜுமுஆ தொழுகை ஆரம்பமாகி விட்டது. எதிர்ப்பு இருந்தும் கூட ஜமாஅத் சகோதரர்கள் தங்களது ஈமானில் உறுதியான பாதங்களுடன் நிலைநின்றவாறு ஜுமுஆ தொழுகையையும் நிறைவேற்றி வருகின்றனர். கனவுகள் மூலமாக பலருக்கும் அல்லாஹ் வழிகாட்டுகின்றான். உலகில் பல இடங்களிலும் இவ்வாறு வழிகாட்டல் கிடைத்து வருகின்றது.

இந்தியாவிலுள்ள கேரளாவின் கன்னூரைச் சேர்ந்த முபல்லிக் இன்சார்ஜ் அவர்கள் எழுதுகின்றார்கள்: இது, ஒரு புதிய அஹ்மதி அஹ்மதிய்யத்தை எவ்வாறு ஏற்றுக் கொண்டார் என்பதைப் பற்றிய சம்பவமாகும். பைஅத் செய்வதற்கு முன்னர் அந்த புதிதாக பைஅத் செய்தவர் அதிகமாக கவலையில் இருந்தார். அப்போது அவரிடம் ஒருவர் உங்களது கவலைக்கான தீர்வு அதிகமாக ஸலவாத் ஓதுவதில் இருக்கின்றது என்று கூறினார். நீங்கள் மிகவும் அதிகமாக ஸலவாத் ஓதுங்கள் என்று அவர் கூறினார். அதைக் கேட்டு அவரும் அதிகமாக ஸலவாத் ஓதி வந்தார். ஒருநாள் அவர் கனவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கல்லறையைப் பார்த்தார். காலியாக இருக்கின்ற இன்னொரு கபரையும் அவர் பார்த்தார். அங்கு ஒரு நபர் வந்து ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விரைவில் உங்களை நான் சந்திப்பேன் என்று கூறினார்கள் என்று கூறினார். இந்தக் கனவை அவர் அஹ்மதி அல்லாத ஒரு மவ்லவியிடம் கூறியபோது அவர் இது ஓர் அருளுக்குரிய கனவாகும். நீங்கள் ஓர் உயர்ந்த அந்தஸ்தை அடையப் போகின்றீர்கள் என்று கூறினார். கனவைக் கண்ட சில நாட்களுக்குப் பிறகு ஒரு பயணத்தில் ஓர் அஹ்மதியை அவர் சந்தித்தார். அந்த அஹ்மதி அவரிடம் கன்னூர் நரகத்திலுள்ள மஸ்ஜிது நூரிற்கு நீங்கள் கண்டிப்பாக செல்லுங்கள் என்று கூறினார். அதற்கேற்ப ஒரு நாள் அவர் ஜமாஅத் பள்ளிவாயிலான மஸ்ஜிது நூரிற்கு வந்தார். ஜுமுஆ தொழுகையில் அவர் கலந்து கொண்டார். அங்கு

ஜமாஅத் பற்றிய அறிமுகம் அவருக்கு கிடைத்தது. ஜமாஅத் நூல்களை அவர் வாசிக்க ஆரம்பித்தார். பிறகு பைஅத் செய்து அவர் ஜமாஅத்தில் இணைந்து விட்டார். இவ்வாறு ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை விரைவில் சந்திப்பேன் என்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதாகும் என்பது எனக்கு தெளிவாகப் புரிந்து விட்டது என்று அவர் கூறுகின்றார்.

பிறகு பெனினின் முபல்லிக் அவர்கள் கூறுகின்றார்கள்: நமது உள்ளூர் முஅல்லிமான அஹ்மது ஜிப்ரீல் சாஹிப் அவர்கள் உள்ளூர் வானொலியில் ஒரு நிகழ்ச்சியை வழங்கி வருகின்றார்கள். ஒருநாள் அவரது நிகழ்ச்சியில் ஒரு பெண்ணிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அந்தப் பெண் கூறினார்: எனக்கு இது வியக்கத்தக்க விஷயமாக இருக்கின்றது. அதாவது மஸீஹின் இரண்டாவது வருகை நிகழ்ந்து விட்டது. எங்களுக்கு அது பற்றி தொரியாமல் இருந்திருக்கின்றது. நான் முஸ்லிமாக இருக்கின்றேன். எனது குடும்பத்தினர் கிறித்தவர்களாக இருக்கின்றனர். அவர்கள் முஸ்லிம்களே சுயமே அவர்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக மஸீஹின் இரண்டாவது வருகை நிகழும். அப்போதுதான் அவர்களுக்கு நேர்வழி கிடைக்கும் என்று கூறுகின்றார்கள் என்று என்னிடம் கூறி பதில் கூற முடியாமல் என்னை ஆக்கி விட்டனர். நீங்கள் எங்கள் கிராமத்திற்கு வந்து அவர்களுக்கு தர்பிய்யத் வழங்குங்கள் என்று அந்தப் பெண் கூறினார். பிறகு இந்தக் கிராமத்தில் சில தப்லீக் அமர்வுகள் நடந்ததன் விளைவாக இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 227 பேர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தனர்.

எங்கு மவ்லவிகளின் கடுமையான தாக்கம் இருக்கின்றதோ அங்கு மவ்லவிகள் மக்களை மிரட்டி அச்சுறுத்தி அஹ்மதிய்யத்திலிருந்து அவர்களை விலக்கி வைக்க முயற்சிகளைச் செய்கின்றனர். ஆனால் அல்லாஹ் மவ்லவிகளின் இந்த செயலின் காரணமாக மக்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். இப்படிப்பட்ட பல சம்பவங்கள் உள்ளன. ஒரு சம்பவத்தை இப்போது கூறுகின்றேன்.

கேம்பியாவிலுள்ள வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த Borofosu என்ற நகரத்திலிருந்து அங்குள்ள முபல்லிக் எழுதுகின்றார்கள்: கடந்த வருடம் இந்த இடத்தில் ஜமாஅத் நிறுவப்பட்டது. அங்குள்ள மவ்லவிகள் ஒரு கூட்டத்தை நடத்தினர். அதில் பல்வேறு மக்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அதில் முஹம்மது சயீத் சாஹிப் அவர்களும் ஒருவராவார். அவருக்கு நமது ஜமாஅத்துடன் தொடர்பு இருந்து வந்தது. ஆனால் அவர் அஹ்மதியாகவில்லை. கூட்டத்தில் மவ்லவிகள் நாம் காதியானிகள் முன்னேறுவதை எவ்வகையிலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே எங்கெல்லாம் இவர்கள் செல்வார்களோ அவர்களைப் பின்தொடர்ந்து நாமும் செல்வோம். அவர்களை அச்சுறுத்துவோம். அவர்களை மிரட்டுவோம். மக்கள் ஜமாஅத்தை விட்டு விட்டு பின்னோக்கிச் செல்லாமல் இருந்தால் அவர்களது உயிரைப் பறிக்க வேண்டியது வந்தாலும் அதையும் கூட நாம் செய்வோம் என்று முடிவெடுத்துள்ளோம் என்று கூறினர். இந்த மவ்லவிகள் சயீத் சாஹிப் அவர்களிடம் நீங்களும் அஹ்மதிகளுடன் எவ்வகையிலும் தொடர்பு வைக்காதீர்கள். (அவர் ஜமாஅத்திற்கு வந்து போவது அவர்களுக்கு தெரிந்து விட்டது.) நீங்கள் அந்த ஜமாஅத்துடன் உள்ள தொடர்பை துண்டிக்காமல் இருந்தால் நாங்களும் இதற்காக எங்களால் செய்ய முடிந்ததை செய்வோம் என்று கூறினார். இதன் விளைவாக மவ்லவிகளின் இந்தக் கூட்டம் நடந்த பிறகு முஹம்மது சயீத் சாஹிப் அவர்கள் தமது குடும்பத்துடன் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து விட்டார்கள். நீங்களே என்னை மிரட்டுகின்றீர்களா? நான் பைஅத் செய்யப் போகின்றேன் என்று கூறினார். இதை தவிர இந்தக் கூட்டத்திற்கு பிறகு இந்த நகரத்தைச் சேர்ந்த 25 பேர் ஜமாஅத்தில் இணைந்தனர்.

அச்சுறுத்தலின் விளைவு எப்படி வெளிப்பட்ட தென்றால், அவர்களுக்கு உண்மை தெளிவாகத் தெரிந்து விட்டது. முன்னர் இருந்ததை விட ஜமாஅத்தின் எண்ணிக்கையும் இங்கு அதிகமாகி விட்டது. அம்மக்கள் ஜமாஅத்தின் மடியில் வந்து அமர்ந்து விட்டனர். இதே நிலைமைதான் அல்ஜீரியாவிலும் ஏற்பட்டிருக்கின்றது. அங்கு அஹ்மதிய்யத் பற்றிய அறிமுகம் அதிகமாக இருந்து வருகின்றது. அங்குள்ள மக்களின் எண்ணம் என்னவென்றால், அங்கும் ஒரு நேரம் வரும்போது மிகவும் அதிகமாக மக்கள் ஜமாஅத்தில் இணைந்து விடுவர் – இன்ஷா அல்லாஹ்.

பிறகு ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டவாறு தன்ஸானியாவின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: நியாங்காமாராவில் நீண்ட காலமாக ஜமாஅத் நிலைநாட்டப்பட்டிருக்கின்றது. அங்கு ஒன்றிரண்டு குடும்பங்கள்தான் அஹ்மதிகளாக இருந்தனர். இந்த வருடம் அதாவது 2016 –ல் உள்ளூர் ஜமாஅத்திலுள்ள அஹ்மதிகளின் ஒத்துழைப்புடன் முறையாக தப்லீக் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந்த நிகழ்ச்சிக்கு வந்தவர்களுக்கு கிலாஃபத்தின் முக்கியத்துவம் பற்றி கூறப்பட்டது. அதனால் மக்களுக்கு காலத்தின் கலீஃபாவை பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஜமாஅத்தைச் சாராத ஒரு நபரிடம் டிஷ் ஆன்டென்னாவும் டி.வி –யும் இருந்தது. அவரிடம் அவரது டி.வி –யில் M.T.A –வை வைக்கும்படி கூறப்பட்டது. அவர் M.T.A வைத்தார். மக்களுக்கு கலீஃபத்துல் மஸீஹை பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இவ்வாறு ஜமாஅத்திற்கு தப்லீக் செய்வதற்கான புதிய வழி திறந்தது.

இதே வருடம் அதாவது 2016 –ல் எங்களது குழு அடுத்த மாதம் மீண்டும் அந்த இடத்திற்கு தப்லீக் செய்யச் சென்றபோது நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தபோது ஒரு மவ்லவி அதில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்தார். எங்களுக்கு அந்த நிகழ்ச்சி வெற்றிகரமாக நடக்காது என்று தோன்றியது. ஆனால் இறைவனின் உதவி எவ்வாறு கிடைத்துக் கொண்டிருந்தது என்றால் தப்லீக் நிகழ்ச்சி மற்றும் கேள்வி பதில் நிகழ்ச்சி நடந்த பிறகு உள்ளூர் மக்களின் இதுவரை பைஅத் செய்யாமல் இருந்த சிலர் அந்த மவ்லவி சாஹிபைப் பார்த்து அஹ்மதிகள் காஃபிர்கள் என்றால் நாங்களும் இப்போது அஹ்மதிகளாக இருக்கின்றோம். நீங்கள் இந்த கிராமத்தை விட்டு வெளியேறுங்கள்; அஹ்மதிகள் இங்கிருந்து வெளியேற மாட்டார்கள் என்று கூறினர். மவ்லவிகளின் இந்த எதிர்ப்பின் காரணமாக மக்களுக்கு அதிகமாக ஜமாஅத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டது. 28 நபர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியம் கிடைத்தது. புதிதாக பைஅத் செய்தவர்களில் ஒருவர் தனது ஒரு பிளாட்டை பள்ளிவாயிலுக்காக வக்ஃப் செய்து விட்டார். புதிதாக பைஅத் செய்த இன்னொருவர் எனது வீடு பெரியதாகவும் மற்ற நண்பர்களது வீட்டிற்கு அருகிலும் இருப்பதால் பள்ளிவாயில் கட்டப்படும் வரை ஜமாஅத்தான தொழுகையை எனது வீட்டில் தொழலாம் என்று கூறினார். நாள்தோறும் அந்த இடத்தில் ஜமாஅத் சகோதரர்கள் ஒன்று சேர்ந்து அங்கு தொழுகையை நிறைவேற்றி வருகின்றனர். இதுபோன்ற பல சம்பவங்கள் உள்ளன. எதிர்ப்பின் காரணமாக மக்களை அஹ்மதிய்யத்திலிருந்து விலக்கி தொலைவில் கொண்டு செல்ல முயற்சி செய்யப்பட்டது அல்லது பேராசை காட்டி மக்களை விலக்கி வைக்க முயன்றனர். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பதுபோன்று இது அல்லாஹ்வின் பணியாகும். அதனால் நாள்தோறும் இதில் முன்னேற்றம் ஏற்படுகின்றது. சில இடங்களில் சுயமே மக்கள் அறிமுகத்தைப் பெற்று நம்மிடம் வருகின்றனர். இவற்றைப் பார்த்து நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ள இந்த விஷயம் நிறைவேறி இருப்பதையும் நாம் பார்க்கின்றோம்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் எல்லா –வற்றையும் சுயமே அவனே செய்கின்றான்''.

தொடர்ந்து ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''குளிர்ந்த காற்று வீச ஆரம்பித் –திருக்கின்றது. இறைவனது பணி மெதுவாக நடக்கின்றது''.

கண்டிப்பாக அவை நடக்கும். மெது மெதுவாக அவை நடக்கின்றது. அவை நடந்து கொண்டே இருக்கும் – இன்ஷா அல்லாஹ். முஸ்லிம்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை எதிர்ப்பதற்குப் பதிலாக அவர்கள் அவர்களை நோக்கிக் கூறியுள்ள இந்த விஷயத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நினைவில் கொள்ளுங்கள். நம்மிடம் எந்தவொரு ஆதாரமும் இல்லாமல் இருந்தாலும் கூட இதுவரையுள்ள காலத்தின் நிலைமைகளைப் பார்த்து பைத்தியக்காரர்களைப் போன்று சுற்றித் திரிந்து மஸீஹ் இதுவரை ஏன் வரவில்லை என்று அவரைத் தேடுவது முஸ்லிம்கள் மீது கடமையாக இருக்கின்றது. இதுவரை சிலுவையை முறிக்க மஸீஹ் ஏன் வரவில்லை என்று அவரை அவர்கள் தேட வேண்டும்''. எதிர்ப்பதற்குப் பதிலாக அந்த மஸீஹை அவர்கள் தேட வேண்டும். காலம் அவரை அவர்கள் தேட வேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இந்த முல்லாக்களுக்கு மனித இனத்தின் நன்மை மற்றும் வளர்ச்சியின் பக்கம் பார்வை இருந்தால் அவர்கள் நம்மிடம் நடந்து கொள்வது போன்று ஒருபோதும் நடக்க மாட்டார்கள். அவர்கள் நமக்கு எதிராக ஃபத்வாக்களை எழுதி எதை உருவாக்கி விட்டனர்? என்பதைப் பற்றி அவர்கள் சிந்திக்க வேண்டும். எவரிடம் இறைவன் இது ஆக வேண்டும் என்று கூறுகின்றானோ அது ஆகக்கூடாது என்று எவரால் கூற முடியும்?''

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நமது எதிரிகளாக இருக்கும் இவர்கள் கூட நமது வேலைக்காரர்களாக இருக்கின்றார்கள். ஏதாவது ஒரு வகையில் நாம் கூறும் விஷயங்களை அவர்கள் கிழக்கிலும் மேற்கிலும் சென்றடையும்படி செய்கின்றனர்''. (மல்.ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 397-398; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) சில சம்பவங்களை நான் கூறினேன். அல்ஜிரியாவிலும் பாகிஸ்தானிலும் எதிர்ப்பின் காரணமாக அஹ்மதிய்யத் பற்றிய அறிமுகம் மேலும் வளர்ச்சி அடைந்துள்ளது என்றே மக்கள் கூறுகின்றனர். எனவே, எதிர்ப்பு பற்றி நமக்கு எந்தக் கவலையும் இல்லை. அது அல்ஜீரியாவில் ஏற்பட்டாலும் சரி. பாகிஸ்தானில் ஏற்பட்டாலும் சரி அல்லது வேறு எந்த நாடாக இருந்தாலும் சரி. நமது தப்லீக் எதிரிகள் மூலமாக முன்பை விட அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றது. அஹ்மதிய்யத்தைப் பற்றிய அறிமுகம் கிடைத்து வருகின்றது. எதிரிகளும் ஆலிம்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ள இந்த விஷயத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் நீங்கள் ஒருபோதும் வரவிருக்கும் அந்த வாக்களிக்கப்பட்ட நபரை சந்திக்கப் போவதில்லை''.

பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ''எனது போதனை என்னவென்றால், நீங்கள் இறையச்சத்தை கை நழுவிப் போகும் வகையில் விட்டு விடாதீர்கள். இறையச்சதுடன் இந்த விஷயங்களை சிந்தியுங்கள். தனிமையில் சிந்தனை செய்யுங்கள். இறுதியில் இறைவனிடம் துஆ செய்யுங்கள். அவன் துஆக்களைக் கேட்கின்றான்''. (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 178; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

நல்லெண்ணத்துடன் நீங்கள் துஆ செய்தால் அல்லாஹ் துஆக்களை கேட்கின்றான். மேலும் அவன் உங்களுக்கு வழிகாட்டுவான். எனவே, அல்லாஹ்விடமிருந்து வழிகாட்டலைப் பெறுவதற்கு தகுதியுடையவர்களாக அல்லாஹ் அவர்களை ஆக்குவானாக! மேலும் அல்லாஹ் இவர்களின் நெஞ்சங்களைத் திறப்பானாக!

தொழுகைக்குப் பிறகு நான் ஒருவருக்கு ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். இந்த ஜனாஸா மதிப்பிற்குரிய ஹாஜி நூஹ் சுவந்து ஹேன்சன் சாஹிப் உடையதாகும். இவர் டென்மார்க்கை சார்ந்த அஹ்மதியாவார். புதன்கிழமை அன்று இவர்களது வஃபாத் நிகழ்ந்தது. اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ

இவர்கள் 28 ஜூன் 1929 –ல் Copen Heagen –ல் பிறந்தார்கள். மார்க்க அடிப்படையில் இவருக்கு லூத்தன் சர்ச் உடன் தொடர்பிருந்தது. டென்மார்க்கை சார்ந்த ஒரு புகழ்பெற்ற தத்துவ மேதையான Grundvig என்பவரது தாக்கம் இவர்கள் மீது அதிகமாக இருந்தது. விவசாய குடும்பத்துடன் தொடர்புடையவர் –களாக இருந்தார்கள். ஹான்சன் சாஹிப் அவர்கள் 1951 –ல் Technical Institute of Denmark –ல் M.Sc. படித்து முடித்தார்கள். பிறகு வேலை நிமித்தமாக மலேசியாவிற்கு சென்றார்கள். 26 ஜனவரி 1956 –ல் இவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கான ஆரம்ப காரணம் ஒரு முஸ்லிம் பெண்ணை திருமணம் செய்வதற்காக இருந்தது. அதற்குப் பிறகு சுயமே இவர்கள் மிகவும் ஆழமாக இஸ்லாத்தைப் பற்றி படித்தார்கள். பிறகு உள்ளத்தாலும் உயிராலும் இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப செயல்பட்டார்கள். 1964 –ல் தனது மனைவியுடன் முதன் முறையாக ஹஜ் செய்வதற்கான நல்வாய்ப்பைப் பெற்றார்கள். அங்கு தொழுகையில் அவர்கள் இறைவனிடம் இவ்வாறு துஆ செய்தார்கள். இறைவா! ஹஜ் கடமையை நிறைவேற்றுவதில் என்னிடம் இருக்கின்ற குறைகளையும் பலவீனங்களையும் நீ மன்னிப்பாயாக! பிறகு ஆன்மீகத்தின் அடிப்படையில் நான் சிறந்து விளங்கும்போது மீண்டும் ஒருமுறை எனக்கு ஹஜ் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவாயாக! என்று அவர்கள் துஆ செய்தார்கள்.

அல்லாஹ் அவர்களது துஆவை எப்படி ஏற்றுக் கொண்டான் என்றால் அவர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பு கிடைத்தது. அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகும் அவர்கள் ஒருமுறை ஹஜ் செய்தார்கள். பலமுறை உம்ராவும் செய்துள்ளார்கள். 1965 –ல் அவர்களுக்கு ஜமாஅத்துடன் தொடர்பு ஏற்பட்டது. ஹஸ்ரத் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் 1968 –ல் வக்ஃபே ஆர்ஸி செய்தவாறு டென்மார்க் சென்றபோது இவர்களுக்கு சவுத்ரி சாஹிபுடன் அதிகம் இருப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அந்த சமயம் வரை அவர்கள் பைஅத் செய்யவில்லை. ஆனால் அஹ்மதிய்யத்தின் போதனைகளின் தாக்கத்திற்கு அவர்கள் ஆளாகி இருந்தார்கள். சில கேள்விகள் அவரது மூளையில் இருந்தன. 1969 –ல் இவர்கள் பாகிஸ்தானுக்கு பயணம் மேற்கொண்டார்கள். சவுத்ரி சாஹிப் அவர்களது வீட்டில் தங்கினார்கள். பயணத்தின் போது அவர்கள் ரப்வாவிற்கும் சென்றார்கள். அப்போது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹுத்தஆலா அவர்களைச் சந்திக்கும் நற்பேறு அவர்களுக்கு கிடைத்தது. அந்த சமயம் வரை அவர்கள் அஹ்மதிய்யத்தைப் பற்றி மிகவும் ஆழமான கண்ணோட்டத்துடன் படித்திருந்தார்கள். ஆனால், அவர்களுக்கு அதில் முழுமையான திருப்தி ஏற்படவில்லை. பிறகு ஹுஸூர் ரஹிமஹுல்லாஹுத் –தஆலா அவர்களைச் சந்தித்தபோது அவர்கள் ஹுஸூர் அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: பிறகு அங்குதான் அஹ்மதிய்யத்தின் உண்மை எனக்கு வெளிப்பட்டது. திரும்பி வந்த பிறகு 7 ஏப்ரல் 1969 –ல் அவர்கள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு தனது பைஅத்தின் கடிதத்தை அனுப்பி வைத்தார்கள். அஹ்மதிய்யத்தில் இணைந்தார்கள். பிறகு இவர்களுக்கு காதியான் செல்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. அங்கு அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மண்ணறையில் நின்றவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு கூறிய ஸலாத்தை எட்ட வைத்தார்கள். 1974 முதல் 1988 வரை டென்மார்க்கின் நேஷனல் செகரட்டரி மால் ஆக தொண்டு செய்யும் நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. இந்த அமைப்பை அவர்கள் சிறப்பாக செயல்பட வைத்தார்கள். 1985 –ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அவரை டென்மார்க் ஜமாஅத்தின் அமீராக நியமித்தார்கள். இதற்கு முன்னர் 27 ஏப்ரல் 1983 –ல் துணை அமீராகவும் இவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் சுவான் ஹான்சன் சாஹிப் அவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்: இவரது மனைவி மலேசியாவைச் சார்ந்த முஸ்லிம் ஆவார். கணவன் மனைவி ஆகிய இருவரும் பெயரளவில் முஸ்லிம்களாக இருக்கவில்லை. மாறாக கலப்பற்ற தன்மை உடையவர்களாகவும் தொழுகையையும் நோன்புகளையும் முறையாகப் பேணி வருகின்ற முஸ்லிம்களாக இருந்தனர். இஸ்லாத்திற்கு சாதகமாக செயல்படுவதில் இந்த அளவு பற்றுள்ள இவரைப் போன்ற மேற்கத்திய நாடுகளைச் சார்ந்த முஸ்லிம்களை நான் மிகவும் குறைவாகவே பார்த்துள்ளேன். திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்வதற்கான வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. 1989 –ல் டேனிஸ் மொழியில் திருக்குர்ஆன் மொழியாக்கம் Computerised Composing உடன் வெளியிடப்பட்டது. அதற்காக சுவான் ஹான்சன் சாஹிப் அவர்கள் போற்றத்தக்க தொண்டுகளைச் செய்துள்ளார்கள். நெல்சன் சாஹிபுடன் இணைந்து பணியாற்றியவாறு அவருக்கு இவர்கள் மிகவும் உதவி செய்தார்கள். 1986 முதல் இவரது உடல்நலம் நன்றாக இருக்கும் வரையில் அதாவது கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் வரை இவர்கள் ஒவ்வொரு வருடமும் யூ.கே –வில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காலத்தில் International Sura நடைபெற்றபோது அந்த சமயத்தில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு உதவியும் ஒத்துழைப்பும் நல்கும் பெருமையும் அவர்களுக்கு கிடைத்தது. ஸ்கேன்டி –னேவியன் நாடுகளுக்கான ஒருங்கிணைந்த பத்திரிகையான Active of Islam –ன் ஆசிரியராகவும் இவர்கள் பணியாற்றியுள்ளார்கள்.

1981 –ல் டென்மார்க்கில் அன்ஸாருல்லாஹ்வின் முதல் ஸயீமே அஃலாவிற்கான தேர்தல் நடைபெற்ற போது இவர்கள் ஸயீமே அஃலாவாக தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். 1984 வரை ஸயீமாக தொண்டாற்றி யுள்ளார்கள். சுவான் ஹான்சன் சாஹிப் அவர்களின் மனைவி அஹ்மதி அல்லாதவராகவும், மிகவும் அதிகமாக ஜமாஅத்தை எதிர்ப்பவராகவும் இருந்தார். அவ்வாறிருந்தும் கூட அவருடன் அனுதாபத்துடனும் பரிவுடனும் இவர்கள் நடந்து கொண்டார்கள். ஆனால் ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதிலும் அவர்கள் எந்தக் குறையும் வைக்கவில்லை. இவர்கள் முறையாக சந்தாக்களை செலுத்துபவராக இருந்தார்கள். பொருள் தியாகத்தில் அதிகமாக பங்கு பெறுபவர்களாக இருந்தார்கள். வாய்ப்பு கிடைக்கும் போது ஜமாஅத்திற்காக தொகையை இவர்கள் வைத்திருந்த ஓர் அக்கவுண்டில் போட்டு வந்தார்கள். ஓய்வு பெற்ற பிறகு டென்மார்க்கிலிருந்து சென்ற சமயத்தில் தனது காரை ஜமாஅத்திற்கு வழங்கினார்கள்.

இவர்களது பொருள் தியாகம் தொடர்பாக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தமது கடிதம் ஒன்றில் இவ்வாறு எழுதியிருந்தார்கள்: சுவான் ஹான்சன் சாஹிபின் தியாகம் பின்பற்றத் தகுந்ததாகும் – மாஷா அல்லாஹ். இவர்கள் ஆரம்பத்தில் இருந்தே கலப்பற்ற மனத்தூய்மை மற்றும் தியாகத்தின் வடிவமாகத் திகழ்ந்தார்கள். பொருள் தியாகத்தின் அடிப்படையில் இவர்கள் ஒரு முன்மாதிரியாகத் திகழ்கின்றார்கள். ஒருபோதும் இவர்களுக்கு நினைவூட்ட வேண்டிய தேவை ஏற்பட்டதில்லை.

மேலும் எழுதுகின்றார்கள்: அல்லாஹ் இவ்வாறு செய்வானாக! ஏனைய ஜமாஅத் சகோதரர்களும் இவரைப் போன்று ஆகி விட்டால் பிறகு செகரட்டரி மாலின் பணி ரிக்கார்டை சரியாக வைத்திருப்பது என்று மட்டுமே இருக்கும். நினைவூட்டுவதற்காக நேரத்தை அவர்கள் செலவு செய்ய வேண்டியது வராது. இறைவன் அவ்வாறே செய்வானாக!

தொழுகைக்குப் பிறகு நான் இவருக்காக ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். அல்லாஹ் மர்ஹூமின் தகுதிகளை உயர்த்துவானாக! இவர்களது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கும் அஹ்மதிய் –யத்தின் போதனைகளுக்கேற்ப செயல்படுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**(கடைசிப் பக்கத்தின் தொடர்ச்சி...)**

தமது சொற்பொழிவில், துக்கத்தில் இருக்கின்ற மனிதயினத்திற்கு உதவி செய்வது நமது கடமையாக இருக்கின்றது என்பதன் பக்கம் கவனமூட்டினார்கள். மேலும் நாம் பலவந்தம், அநீதியிழைத்தல், தீவிரவாதம் மற்றும் சுயநலம் ஆகியவற்றைக் கை விட்டு விட்டு ஒற்றுமையாக இருக்க வேண்டும். இந்த போதனையைத்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள் என்று ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

◗ ஐ.டி. -யில் பணிபுரிந்து வருகின்ற கணேஷ் தமது கருத்துக்களை இவ்வாறு தெரிவித்தார்கள்:

நான் கலீஃபாவை சந்தித்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். மேலும் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதால் நான் மகிழ்ச்சியை உணர்கின்றேன்.

◗ மக்ஸூது என்ற ஒரு மாணவர் தனக்கு ஏற்பட்ட தாக்கங்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹுஸூர் அவர்கள் கூறியதுபோன்றே நாம் அனைவரும் சிந்தித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். நான் ஹுஸூர் அவர்களது சொற்பொழிவினால் மிகுதியான தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். நான் இந்த தூதுச் செய்தியை என்னுடன் கொண்டு செல்வேன். அதனை எனது வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்குவதற்கு முயற்சி செய்வேன்.

*(தொடரும்...)*

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 11 May 2017 Issue No. 19

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

**ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் உலகிலுள்ள எல்லா மக்களுக்காகவும் இருந்தது. இந்த தூதுச்செய்தி உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் எட்ட வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.**

**ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு மிகவும் தாக்கம் நிறைந்ததாக இருந்தது. நான் மிகவும் மகிழ்ச்சியாகவும் தாக்கத்திற்கு ஆளாகியும் உள்ளேன். கலீஃபாவிடம் ஒரு திகில் காணப்படுகின்றது. நான் அவர்களுக்கு அருகில் சென்ற போது ஒரு நடுக்கம் என்னை ஆட்கொண்டது. எனவே நிச்சயமாக அவர்களிடம் ஓர் ஆற்றல் இருக்கின்றது.**

# கனடாவிலுள்ள அய்வானே தாஹிரில் 22 அக்டோபர் 2016 -ல் நடைபெற்ற அமைதிக் கருத்தரங்கில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் சொற்பொழிவைக் கேட்ட, கருத்தரங்கில் கலந்து கொண்ட கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் தாக்கங்கள்.

## இரண்டாம் பாகம்:

◗ பாராசாத் என்ற விருந்தினர் தமது கருத்துக்களை இவ்வாறு தெரிவித்தார்:

ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் உலகிலுள்ள எல்லா மக்களுக்காகவும் இருந்தது. இந்த தூதுச் செய்தி உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் எட்ட வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

◗ சமூக ஆர்வலரான லூஸி கரானோல் அவர்கள் தமது எண்ணங்களை இவ்வாறு வெளிப்படுத்தினார்:

கலீ∴பா அவர்களின் சொற்பொழிவிலிருந்து இதற்கு முன்னர் நான் அறிந்திராத பல விஷயங்களையும் கற்றுக் கொண்டேன். அவர்கள் சொற்பொழிவு மட்டும் நிகழ்த்தவில்லை. மாறாக, பரஸ்பரம் நம்மில் ஒருவர் மற்றவரை எவ்வாறு நேசிக்கலாம்? என்பதைப் பற்றியும் அவர்கள் நமக்கு தெரிவித்துள்ளார்கள். எவ்வாறு முழு மனித இனமும் ஒன்றாக இருக்கின்றது என்பதைப் பற்றியும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் கூறிய ஒரு விஷயம் என்னிடம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது, மனிதன் என்ற நிலையில் ஏதாவதொரு விஷயத்தில் நமக்கிடையில் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், இதற்கான தீர்வை நாம் எவ்வாறு காண்பது என்பதற்கான முயற்சிகளை நாம் செய்ய வேண்டும். நாம் முதலில், நாம் கூறுகின்ற விஷயங்களைப் புரிய வேண்டியது இருக்கின்றது. பிறகு நாம் நீதியுடன் பிரச்சனைகளுக்கான தீர்வைக் காண முடியும் என்று கலீ∴பா அவர்கள் கூறினார்கள். அவர்கள் கூறிய இன்னொரு விஷயம் என்னை உலுக்கி விட்டது. அது இதுவாகும். அதாவது, நாம் நமக்கிடையிலுள்ள கருத்து வேறுபாடுகளை அகற்றாமல் இருந்தால் ஒற்றுமையாக வாழ்வதை கற்றுக் கொள்ளாமல் இருந்தால் பிறகு அதன் விளைவாக வருங்கால தலைமுறையினருக்கு அதனால் ஏற்படும் பாதிப்பை சுவைக்க வேண்டியது வரும். நம்மை இறைவன்தான் உருவாக்கி இருக்கின்றான். நமக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் கூட நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று கலீ∴பா அவர்கள் கூறினார்கள்.

◗ யார்க் பல்கலைகழகத்தின் மாணவரான மேகன் அவர்கள் தமது கருத்துக்களை இவ்வாறு தெரிவித்தார்:

எனக்கு இன்று இங்கு வந்ததில் மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத் எவ்வாறு பல்வேறு மட்டத்திலுள்ள மக்களில் ஒருவரை மற்றவருக்கு அருகில் கொண்டு வந்து கொண்டிருக்கின்றது என்பதைப் பார்த்து அது எனக்கு மிகவும் நல்லதாகத் தோன்றியது. எனது கருத்தின்படி உலகிற்கு இந்த விஷயத்தின் தேவைதான் இருக்கின்றது.

◗ Zeetha Community -யின் உறுப்பினரான அபூபக்கர் யூசு∴ப் அவர்கள் தமது கருத்துக்களை இவ்வாறு தெரிவித்தார்கள்:

எதை நான் கேட்டேனோ பார்த்தேனோ அதனால் நான் மிகுதியான தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். ஹுஸூர் அவர்கள் தமது சொற்பொழிவில் பெருமானார் (ஸல்) அவர்களின் பல முன்மாதிரிகளை எடுத்துக் கூறினார்கள். நாம் அதற்கேற்ப செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று அவர்கள் நமக்கு கவனமூட்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவரையும் ஒருபோதும் பலவந்தமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வைக்கவில்லை என்பதை பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியிலிருந்து ஹுஸூர் அவர்கள் நிரூபித்துக் காட்டினார்கள். திருக்குர்ஆன் வசனங்களை சான்றாக காட்டி இஸ்லாமிய போதனைகளை அவர்கள் விளக்கிக் கூறினார்கள். திருக்குர்ஆனில் لَآ اِكْرَاهَ فِي الدِّيْنِ 'மார்க்கத்தில் எவ்வித பலவந்தமும் இல்லை' என்று வந்திருப்பதை அன்னார் எடுத்துக் கூறினார்கள். பிறகு எவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் கிறித்தவர் -களுக்கும், யூதர்களுக்கும், இந்துக்களுக்கும் அல்லது வேறு மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களுக்கும் அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கினார்கள் என்பதையும், மனிதன் என்ற நிலையில் நாம் அனைவரும் ஒன்றாக இருக்கின்றோம் என்பதன் பக்கம் எவ்வாறு அவர்களுக்கு கவனமூட்டினார்கள் என்பதையும் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஹுஸூர் அவர்கள்

(தொடர்ச்சி 7 -வது பக்கம்...)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

குலஃபா' வாக இருந்ததுபோல் நான் ஆன்மீகமான முறையில் இஸ்லாத்தில் காத்தமுல் குலஃபாவாக இருக்கிறேன். மேலும் மூஸா உடைய சமுதாயத்தில் இப்னு மர்யம் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருந்ததைப்போல் நான் முஹம்மதிய்ய சமுதாயத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கிறேன். அவருடைய பெயரைக் கொண்டிருக்கும் நான் அவரை பெரிதும் கண்ணியப்படுத்துகிறேன். நான் மஸீஹ் இப்னு மர்யமுக்கு மதிப்பு அளிப்பதில்லை என்று என்னை குறை கூறுகிறவர் குழப்பத்தை உருவாக்கக் கூடியவரும் இட்டுக்கட்டி பேசக் கூடியவருமாவார். மஸீஹ் என்ன ? நான் அவரது நான்கு சகோதரர்களையும் கௌரவிக்கிறேன்.[4]

இந்த ஐந்து மக்களும் ஒரே தாயின் குமாரர்களாவர். இவர்களை மாத்திரமல்லாமல் நான் ஹஸ்ரத் மஸீஹ் உடைய உண்மையான இரு சகோதரிகளையும் பரிசுத்தமானவர்களாக நம்புகிறேன். ஏனெனில் இப்பெரியோர்கள் அனைவரும் புனித மர்யமின் வயிற்றிலிருந்து வந்தவர்களாவர். மர்யமுடைய சிறப்புத் தன்மையென்னவெனில் அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை தன்னை திருமணத்திலிருந்து தடுத்துக் கொண்டார்கள். பிறகு அவர்கள் கர்ப்பமுற்றிருந்த காரணத்தால் அவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்த பெரியோர்கள் மிகவும் வற்புறுத்தியதன் விளைவாக திருமணம் செய்து கொண்டார்கள். தவ்ராத்தின் போதனைக்கு மாறாக கர்ப்பமுற்றிருக்கையில் திருமணம் செய்ததேன் ? கன்னியாக இருப்பேன் என்ற உடன்படிக்கை ஏன் அநீதியாக முறிக்கப்பட்டது ? பலதார மணத்திற்கு அடித்தளம் அமைத்ததேன் ? அதாவது தச்சன் யூசுஃபுக்கு முதல் மனைவி இருக்கையில் அவரை மணம் செய்ய மர்யம் ஒப்புக் கொண்டதேன் ? என்றெல்லாம் மக்கள் ஆட்சேபணை செய்தாலும் இவை அனைத்தும் அவர்களுக்கு நிர்பந்தத்தின் காரணத்தால் உண்டானவை என்றே நான் கூறுவேன். இந்நிலையில் (மர்யமாகிய) அவர் அனுதாபத்திற்குரியவரே அல்லாமல் ஆட்சேபணைக்குரியவர் அல்லர்.

*(கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 16-18)*

4. இயேசு மஸீஹுக்கு நான்கு சகோதரர்களும் இரு சகோதரிகளும் இருந்தனர். இவர்கள் அனைவரும் இயேசு உடைய உண்மையான சகோதரர்கள் சகோதரிகளாவர். அதாவது இவர்கள் அனைவரும் யூசு∴ப் மற்றும் மர்யமுடைய சந்ததிகளாவர். நான்கு சகோதரர்களின் பெயர்களாவன: (1) யூதா (2) யா∴கூப் (3) ஷம்வூன் (4) யோஸிஸ். இரு சகோதரிகளின் பெயர்களாவன: (1) ஆஸ்யா (2) லீத்யா. நூல்: அபாஸ்டாலிக் ரிக்கார்ட்ஸ் எழுத்தாளர் பாதிரிஜான் அமிலன் காயல்ஸ் இரண்டன் பதிப்பு 1886 -ம் ஆண்டு பக்கம் 159,166 காண்க.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad